தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வானிலை அறிவிப்பு: தமிழகம், புதுச்சேரியில் மழை தொடரும்

வங்ககடலில் இருந்து வீசும் காற்றில் ஈரப்பதம் மிகுந்திருப்பதால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்திற்கு மழை நீடிக்கும் வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறி வித்துள்ளது. மேலும் சென்னையை பொறுத்த வரை சில இடத்தில் லேசான மழை பெய்யும் எனவும் தெரிவித்துள்ளது.

### திற்பரப்பு அருவியில் வெள்ளம் அதிகரிப்பு



குமரி மாவட்டத்தில் தொடர் சாரல் மழை பெய்வதால் இதமான கால நிலை நிலவுகிறது. பொதுவாக மாவட்டத்தில் கார்த்திகை மாதத்தில் காலையில் கடும் குளிரும் பிற்பகலில் அதிக வெப்பம் இல்லாத வகையில் வெயிலும் நிலவும். இந்நிலையில் மாவட்டத்தில் குறிப்பாக மலையோரப் பகுதிகளில் பிற்பகலில் தொடர் சாரல் மழை பெய்து வருவதால் வெப்ப மற்ற கால நிலையே நிலவுகிறது. திற்பரப்பு அருவியில் வெள்ளம் அதிகம்: கடந்த சில நாள்களாக திற்பரப்பு அருவியில் வெள்ளத்தின் வரத்து சற்று மிதமாக இருந்து வந்த நிலையில் தொடர் சாரல் மழை காரணமாக அருவி யில் வெள்ளம் சற்று அதிகமாகக் கொட்டுகிறது. தற்போது இங்கு ஏராள மான சுற்றுலாப் பயணிகள் வந்த வண்ணம் உள்ளன

### வேலூர் மாவட்டத்தில் பரவலாக மழை

வேலூர் மாவட்டத்தில் சனிக்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை மாலை வரை பல இடங்களில் பரவலாக நல்ல மழை பெய்தது. ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகரட்சமாக அரக்கோணத்தில் 38.6 மி.மீட்டர்

மழை பதிவானது. பிற இடங்களில் பெய்த மழை அளவு: வேலூர் 23.6, ஆற்காடு 20.4, குடியாத்தம் 1.2, மேல்ஆலத்தூர் 2.2, வாலாஜா 9, சோளிங்கர் 28.4, காவேரிபாக்கம் 18.6.

**<u>நெல்லை மாவட்டத்தில் மழை நீடிப்பு: நிரம்பும் நிலையில் மணிமுத்தாறு அணை</u>**

திருநெல்வேலி மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமையும் பரவலாக மழை பெய்தது. நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழை காரணமாக பாபநாசம், சேர்வலாறு ஆகிய பிரதான அணைகள் நிரம்பிய நிலையில், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 110 அடியை எட்டியது. இந்த அணையும் ஓரிரு தினங்களில் முழுக் கொள்ளளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிகழ் பருவத்தில் வடகிழக்குப் பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. நவம்பர் மாத இறுதி வரை தாமிரவருணி பாசனத்தில் 1,166.78 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இதற்கிடையே, கடந்த சில தினங்களாக பரவலாகப் பெய்து வரும் மழை ஞாயிற்றுக் கிழமையும் நீடித்தது. பிற்பகலில் திருநெல்வேலி, மேலப்பாளையம், பாளையங்கோட்டை, பேட்டை, பத்தமடை, சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரம், சிவந்திபுரம், அடையக்கருங்குளம், விக்கிரமசிங்கபுரம் பகுதியில் பலத்த மழை பெய்தது. ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பாபநாசம் அணையில் 46 மி.மீ. மழை பதிவானது. பிற இடங்களில் மழை அளவு (மி.மீட்டரில்) மணிமுத்தாறு அணை 45.2, நான்குனேரி 10, மூலக்கரைப்பட்டி 13, தூத்துக்குடி மாவட்டத்தில் காயல்பட்டினம் 25, ஓட்டப்பிடாரம் 16 மி.மீ. தொடர்ந்து நீர்வரத்து: ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு நொடிக்கு 2,470.78 கன அடியும், சேர்வலாறு அணைக்கு 800 கன அடியும் நீர்வரத்து இருந்தது. அணைகளில் இருந்து 3,000 கன அடி உபரிநீர் திறக்கப்பட்டது. இந்த நிலையில், பிற்பகலில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த மழையால் இவ்விரு அணைகளுக்கும் நீர்வரத்து

கணிசமாக அதிகரித்தது. இதையடுத்து, அணைகளிலிருந்து 5,000 கன அடி தண்ணீர் தாமிரவருணி ஆற்றில் திறக்கப்பட்டுள்ளதாக அணை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால், தொடர்ந்து 5-ஆவது நாளாக ஆற்றில் வெள்ளப்பெருக்கு இருந்தது. மணிமுத்தாறு நிரம்புகிறது: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 142.20 அடியாகவும், சேர்வலாறு 146.26 அடியாகவும், மணிமுத்தாறு 2.20 அடி உயர்ந்து 110 அடியாகவும் இருந்தன. அணைக்கு நொடிக்கு 1,901 கன அடி நீர்வரத்து இருந்தது. 118 அடி கொள்ளளவு கொண்ட மணிமுத்தாறு அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து இருப்பதால் ஒருசில தினங்களில் அணை முழுக் கொள்ளளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிற அணைகளின் நீர்மட்டம்: கடனாநதி அணை 84.40 அடி, ராமநதி 81.50 அடி, கருப்பாநதி 65.62 அடி, குண்டாறு 36.10 அடி, அடவிநயினார் 95 அடி, வடக்குப் பச்சையாறு 43 அடி, நம்பியாறு 22.96 அடி, கொடுமுடியாறு 31.50 அடி. கடனாநதி அணையிலிருந்து 110 கன அடியும், நம்பியாறு அணை யிலிருந்து 100 கன அடியும் உபரிநீர் திறந்துவிடப்பட்டுள்ளது. மணிமுத்தாறு அணையில் பிரதான கால்வாய் பாசனத்துக்கு 200 கன அடி திறந்துவிடப்படுகிறது. அருவியில் வெள்ளப்பெருக்கு: மணிமுத்தாறு அருவியில் நீர்வரத்து 2 தினங்களாகக் குறைந்து காணப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை மாலை அருவிக்கு நீர்வரத்து அதிகரித்ததால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பாபநாசம், சேர்வலாறு அணைகளில் உபரிநீர் தொடர்ந்து திறந்துவிடப்படுவதால் கல்யாணதீர்த்த அருவி, அகஸ்தியர் அருவிகளில் தண்ணீர் அதிக அளவில் விழுந்தது.

## <u>மாதுளை விவசாயிகளுக்கு கடனுதவி: நபார்டு வங்கி பரிந்துரை</u>

மாதுளை சாகுபடி மற்றும் ஆடு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கடனுதவி வழங்க நபார்டு வங்கி பரிந்துரை செய்துள்ளது. திண்டுக்கல் மாவட்ட நபார்டு வங்கி சார்பில், தோட்டக்கலைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, விவசாயிகள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கான

கருத்தரங்கு மற்றும் பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில், நபார்டு வங்கியின் திண்டுக்கல் மாவட்ட உதவி பொதுமேலாளர் இல.சஞ்சீவி தெரிவித்தது: விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி துறைகளிலும் முதலீடுகளை அதிகப்படுத்தும் நோக்கில், வட்டார வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி, அதனை செயல்படுத்த நபார்டு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. நபார்டின் இந்த திட்டத்தின் மூலம், விவசாய உற்பத்தி அதிகரிப்பதோடு, விவசாயிகளும் கூடுதல் லாபம் பெற முடியும். இதன் ஒரு பகுதியாக பக்வா என்ற புதிய ரக மாதுளை சாகுபடி மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெற முடியும் என கண்டறியப்பட்டுள்ளது. தமிழகத்தில் கோவை, தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், திருப்பூர் ஆகிய 7 மாவட்டங்களில், மாதுளை சாகுபடிக்கு ஏற்ற சூழ்நிலை உள்ளது. இதேபோல் ஆடு மற்றும் செம்மறி ஆடு வளர்ப்பும், சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்றவர்களுக்கும் அதிக வருமானத்தை ஈட்டித்தரும் வாழ்வாதாரமாக உள்ளது. கிருஷ்ணகிரி, நாமக்கல், திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர், திருவண்ணாமலை, தருமபுரி மற்றும் மதுரை மாவட்டங்களில், ஆடு வளர்ப்புக்கு நல்ல வாய்ப்புள்ளது. இதனால் மாதுளை சாகுபடி மற்றும் ஆடு வளர்ப்புக்கு ஏற்ற பகுதிகளில், விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கு ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு, நபார்டு வங்கி பரிந்துரை செய்துள்ளது என்றார் அவர்.

## <u>இயற்கை வேளாண்மை பயிற்சி ஆலோசனைக் கூட்டம்</u>

போடியில் இயற்கை வேளாண்மை பயிற்சிப் பட்டறை குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சிப் பட்டறை முகாம் மதுரை, காந்தி அருங்காட்சியக வளாகத்தில் வரும் ஜன.24 முதல் 27ஆம் தேதி வரை 4 நாள்கள் நடைபெற உள்ளது. இதுகுறித்த, தேனி மாவட்ட சர்வோதய மண்டல் நிர்வாகிகள் ஆலோ

சனைக் கூட்டம் போடியில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது. தேனி மாவட்ட சர்வோதய மண்டல், மாவட்டத் தலைவர் சம்பத் தலைமை வகித்தார். மாநில இணைச்செயலர் நடராஜன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில், இயற்கை வழி வேளாண்மையை பரப்பி வரும், மகாராஷ்டிரா மாநில வேளாண் விஞ்ஞானி சுபாஷ் பாலேக்கர் கலந்து கொண்டு பயிற்சி அளிக்க உள்ளதாகவும், இந்த பயிற்சி முகாமில் தேனி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளை அதிக அளவில் பங்கேற்க செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தேனி மாவட்ட துணைத் தலைவர் சேதுபதி, செயலர் ராஜேந்திரன், பொருளாளர் தங்கமுத்து, இணைச்செயலர் முத்துநடராஜன், போடி வட்டாரத் தலைவர் முருகன், செயலர் கணேசன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## <u>செந்துறையில் உழவர் பாதுகாப்புத் திட்ட முகாம்</u>

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டத்துக்குள்பட்ட பொதுமக்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி செந்துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த உடையார்பாளையம் வருவாய்க் கோட்டாட்சியர் கருணாகரன், ஈமசடங்கு உதவித்தொகை, திருமண உதவிதொகை உள்பட மொத்தம் 114 பேருக்கு ரூ. 13.44 லட்சத்திலான காசோலைகளை வழங்கினார். நிகழ்ச்சியில் தனித்துணை ஆட்சியர் சீனிவாசன், சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் அமுதா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் குமரய்யா, வட்ட வழங்கல் அலுவலர் தேன்மொழி, வருவாய் ஆய்வாளர்கள் உள்பட பலர் பங்கேற்றனர். வட்டாட்சியர் ரவி நன்றி கூறினார்.

## <u>மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 6,180 கன அடியாக அதிகரித்தது. கர்நாடக மாநிலத்தில் காவிரி ஆற்றின்

நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த இருநாள்களாக மழை பெய்து வருகிறது. இதனால், சனிக்கிழமை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 5,809 கன அடியாக இருந்தது. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 6,180 கன அடியாக அதிகரித்தது. இதனால், ஞாயிற்றுக்கிழமை காலை அணையின் நீர்மட்டம் 98.57 அடியாக இருந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனம், கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்கு நொடிக்கு 15,600 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 63 டி.எம்.சி.யாக இருந்தது.

## கேழ்வரகு அறுவடை இயந்திரம் வாங்க கடனுதவி

கர்நாடகத்தில் கேழ்வரகு அறுவடை இயந்திரம் வாங்க விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கப்படும் என்று, அந்த மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் கிருஷ்ண பைரேகௌடா தெரிவித்தார். அகில இந்திய சிறுதானியங்கள் மேம்பாட்டுத் திட்டம், பெங்களூரு வேளாண் பல்கலைக்கழகம், வேளாண்மைத் துறை கூட்டாக பெங்களூருவில் ஞாயிற்றுக்கிழமை நடத்திய கேழ்வரகு அறுவடை இயந்திர அறிமுக விழாவில் அவர் பேசியது: விவசாயத் தொழிலில் ஈடுபடுவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால், விளை பொருள்களை உரிய நேரத்தில் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் அவதிப் படுகின்றனர். இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில், விவசாய இயந்திரங்களின் பயன்பாட்டை அதிகரிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக விவசாய இயந்திரங்களைத் தயாரிக்க அரசு முனைந்துள்ளது. இதனிடையே, கேழ்வரகு அறுவடை இயந்திரத்தை கொள்முதல் செய்ய விவசாயிகளுக்கு கடனுதவி வழங்க அரசு தீர்மானித்துள்ளது. நிகழ் நிதியாண்டில், 186 சட்டப்பேரவைத் தொகுதிகளில் விவசாயிகள் டீசல் மூலம் இயங்கும் அறுவடை இயந்திரங்களை கொள்முதல் செய்ய ரூ.70 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள

கேழ்வரகை அறுவடை செய்வதற்கு இந்த இயந்திரத்தை பயன்படுத்தி னால் அதற்காக ரூ.600 முதல் ரூ.700 வரை செலவாகும். ஆனால், தொழிலாளர்கள் மூலம் அறுவடை செய்தால் ரூ.5 ஆயிரம் வரை செலவாகும். எனவே, இயந்திரங்களைப் பயன்படுத்தினால் விவசாயி களுக்கு செலவு குறையும். மேலும், கேழ்வரகு, மக்காசோளத்தை கொள்முதல் செய்ய அரசு தீர்மானித்துள்ளது. ஒரு குவின்டால் கேழ்வரகு, மக்காசோளத்துக்கு கொள்முதல் விலையாக ரூ.1,500 அறிவிக்கப் பட்டுள்ளது. இத்துடன் மாநில அரசு சார்பில் ரூ. 500 சேர்த்து, ரூ. 2 ஆயிரம் வழங்கப்படும் என்றார். விழாவில் வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டி.பி.குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**முட்டை விலை 346 காசாக நிர்ணயம்**

நாமக்கல் : தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 346 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். இதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 356 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, பத்து காசு குறைத்து, 346 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 380, பெங்களூரு, 370, மைசூரு, 375, ஹைதராபாத், 365, மும்பை, 403, விஜயவாடா, 353, கோல்கத்தா, 400, பர்வாலா, 380, டில்லி, 400.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணை யாளர்கள், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக்

கோழி விலை, ஒரு கிலோ, 66 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 68 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## கால்நடை மருத்துவ முகாம்

அனுப்பம்பட்டு: கால்நடைகளுக்கான மருத்துவ முகாம் அனுப்பம்பட்டு ஊராட்சியில் நடந்தது. தமிழக சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்டத்தின் கீழ், மீஞ்சூர் ஒன்றியம், அனுப்பம்பட்டு ஊராட்சியில், மருத்துவ முகாம் நடந்தது.கால்நடை பராமரிப்பு துறை அலுவலர்கள் மருத்துவ சிகிச்சை அளித்தனர். உத்தண்டிகண்டிகை, அனுப்பம்பட்டு பெரியகாலனி, ஊராட்சி மன்ற அலுவலகம் என, மூன்று இடங்களில், முகாம் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. முகாமில், செயற்கை முறை கருவூட்டல், சினை பரிசோதனை, கோழிகளுக்கு தடுப்பூசி, குடற்புழு நீக்கம் உள்ளிட்ட மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டன. இதில், ஆடு, மாடு, கோழி, நாய் என, 70 கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.

## 30 ரூபாய்க்கு விதை பரிசோதனை

காஞ்சிபுரம்: தர்பூசணி மற்றும் நிலக்கடலை பயிரிடும் விவசாயிகள், 30 ரூபாய் செலுத்தி, விதை பரிசோதனை செய்து கொள்ள அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதுகுறித்து, காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: காஞ்சிபுரம் மாவட்டத்தில், கார்த்திகை பட்டமான தற்போது, நிலக்கடலை சாகுபடி செய்ய ஏதுவான தட்பவெப்ப நிலை நிலவுகிறது. எனவே, நிலக்கடலை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த நிலையில், 70 சதவீத முளைப்பு திறன் உள்ள விதைகளை பயன்படுத்தினால், ஒவ்வொரு செடியிலும் 40 காய்களுக்கு குறையாமல், ஏக்கருக்கு 30 சதவீத கூடுதல் மகசூல் கிடைக்கும். இதேபோல், தர்பூசணி சாகுபடியில் குறைந்தபட்சம் 60 சதவீதம் முளைப்பு திறன் இருந்தால் தான், கூடுதலாக 20 சதவீதம்

மகசூல் கிடைக்கும். இந்த விதைகளை 8 அடிக்கு 3 அடி என்ற இடைவெளியில், ஏக்கருக்கு 600 கிராம் விதைகளை பயன்படுத்தும் போது, ஏக்கருக்கு 1700 செடிகள் என்ற எண்ணிக்கையில் பயிரை பராமரிப்பது எளிதாக இருக்கும். எனவே, நிலக்கடலையில் 500 கிராம் விதையும், தர்பூசணியில் 100 கிராம் விதையும் மாதிரியாக எடுத்து, தலா 30 ரூபாய் கட்டணத்துடன், நேரிலோ அல்லது தபால் மூலமோ காஞ்சிபுரம் விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி, விவசாயிகள் முடிவுகளை பெறலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு

சத்தியமங்கலம் : நீலகிரி மலைப்பகுதியில், தொடர்ந்து மழை பெய்து வருவதால், பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணை என்ற பெருமை கொண்டது, பவானிசாகர் அணை. இந்த அணையின் மொத்த உயரம், 120 அடியாகும். இதில், சகதிகள், 15 அடி கழித்து, மொத்த நீர்மட்ட உயரம், 105 அடியாகும். மொத்த நீர் கொள்ளளவு, 32 டி.எம்.சி., ஆகும்.இந்த அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்கால் மூலம் திறந்துவிடும் தண்ணீரால், ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த, 2.07 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுகிறது. பவானி ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீரால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனப்பகுதியை சேர்ந்த, 50 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறுகிறது.கடந்த சில மாதங்களாக, பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியில், போதிய மழை பெய்யாத காரணத்தால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வந்தது. இதனால், ஈரோடு மாவட்டத்தில், குடிநீர் பஞ்சம் ஏற்படும் அச்சம் நிலவியது.இந்த நிலையில், பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் பருவமழை துவங்கியதால், அணையின் நீர்வள

ஆதாரமான, பவானி ஆறு மற்றும் மோயாற்றில், தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால், அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து நேற்று மாலை, 85 அடியை தொட்டது.நேற்று அணைக்கு வினாடிக்கு, 3,457 கனஅடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து, பவானி ஆற்றின் மூலம் வினாடிக்கு, 500 கனஅடியும், கீழ்பவானி வாய்க்கால் மூலம் வினாடிக்கு, 1,600 கனஅடி தண்ணீரும் திறக்கப்படுகிறது.

## தஞ்சையில் மழை

தஞ்சாவூர்: கடந்த இரண்டு நாட்களாக, வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, தஞ்சை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் நேற்று காலை, 8.30 மணியுடன் முடிவடைந்த, 24 மணிநேரத்தில் பெய்த மழை (மில்லி மீட்டரில்): அதிராம்பட்டினம், 1.20, கும்பகோணம் 30, பாபநாசம்,11, தஞ்சாவூர், 20.40, திருவையாறு, 5, திருக்காட்டுப்பள்ளி, 1.40, வல்லம், 14.50, அணைக்கட்டு,00.80 அய்யம்பேட்டை, 17, திருவடைமருத்தூர், 15.30, மஞ்சலாறு, 16, நெய்வாசல் தென்பதி, 9, பூதலூர், 1, ஈசன்விடுதி, 7.40, ஒரத்தநாடு, 5.38, பேராவூரணி, 2.20, கல்லணை,7.20, குருங்குளம், 3 என, மொத்தம் 167.78 மழை பதிவாகி உள்ளது.

## தேனீ வளர்ப்பு குறித்து பயிற்சி

நத்தம் : ராக்கம்பட்டி தீபம் அறக்கட்டளை சார்பில் திருச்சி அரசு வேளாண் மை கல்லூரிக்குட்பட்ட தோட்டக்கலைத்துறை மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களுக்கு தேனீ வளர்ப்பு மற்றும் தேன் உற்பத்தி குறித்து பயிற்சி முகாம் பிள்ளையார்நத்தம் ஊராட்சி தென்மலை யில் நடந்தது. தீபம் அறக்கட்டளை தலைவர் ராஜா தலைமை வகித்தார். திருச்சி வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரி பூச்சியியல் துறை பேராசிரியர்கள் முத்துராமன், டேவிட், அம்பேத்கர் முன்னிலை வகித்தனர். அறக்கட்டளை செயலாளர் மச்சக்காளை வரவேற்றார். ராக்கம்பட்டி தென்மலையில் மாணவர்களுக்கு தேனீக்கள் வகை

குறித்தும், ராணி தேனீயை கண்டறிந்து மரப்பெட்டிகளில் சேகரிப்பது, பின்னர் வேலைக்கார தேனீக்கள் இதில் வந்து சேரும் வகையில் தேனடைகளை மரச்சட்டங்களில் கட்டிபெட்டிகளில் அடுக்குவது குறித்து பயிற்சியளிக்கப்பட்டது.

## தேவைக்கேற்ப யூரியா வேளாண்துறை முடிவு

திண்டுக்கல் : மாவட்டத்தில் பரவலாக நெல் சாகுபடி துவங்கப்பட்டுள்ளதால் யூரியா உரங்கள் பற்றாக்குறையாக இருக்கக்கூடாது என கலெக்டர் வெங்கடாசலம் வேளாண் தரக்கட்டுபாடு அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளார்.வேளாண் தரக்கட்டுப்பாட்டு உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் கூறியதாவது:"பழநியில் அதிகளவு நெல் சாகுபடி துவங்கியுள்ளது. யூரியா உரம் தட்டுபாடில்லாமல் விவசாயி களுக்கு கிடைக்க செய்ய வேண்டுமென அனைத்து வேளாண் தரக்கட்டு பாட்டு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது யூரியா 724 டன், டி.ஏ.பி. 530 டன், பொட்டாசியம் 1240 டன், காம்ப்ளக்ஸ் 1735 டன் உள்ளன. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கான 300 டன் கிரிப்கோ யூரியா கையிருப்பில் உள்ளது,' என்றார்.

## இயற்கை தொழு உரம் பயன்பாடு அதிகரிப்பு

தாண்டிக்குடி : தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதியில் இயற்கை தொழு உரங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. சமீபகாலமாக விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் ரசாயன உரங்கள் பயன்படுத்தப் பட்டன. தொடர்ந்து எதிர்பார்த்த மகசூல் கிடைத்தப் போதும் மண் வளத்தில் பாதிப்பு இருந்து வந்தது. குறு விவசாய பயிர்களான பீன்ஸ், அவரை, சவ்சவ், ஆரஞ்சு, மலை வாழைக்கு தேவையான உரச்சத்து பெற தோட்டக்கலைத்துறையினர் தொழு உரங்களை பயன்படுத்துமாறு அறிவுறுத்தினர். இதையடுத்து மூன்று ஆண்டுகளாக விவசாயிகள் தொழு உரங்களை தோட்டங்களில் பயன்படுத்தி வருகின்றனர். நகர்பகுதியில் ஆடு மற்றும் மாடுகளின் கழிவுகளை அதிகளவு வாங்கி வருவதால் கிராக்கி ஏற்பட்டுள்ளது. தொழு உரம் பயன்படுத்துவதால் நல்ல மகசூல்

மற்றும் மண்வளம் மேம்படுவதால் ரசாயன உரங்களை குறைத்து வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**<u>நெல் அறுவடைக்கு பின்பு சிறுதானியம் பயிரிட வாய்ப்பு! மழை நீரை சேமித்து ஏக்கருக்கு 20 ஆயிரம் லாபம்</u>**

காரைக்குடி : தற்போது பெய்துள்ள மழையால் கண்மாய்கள் ஓரளவு பெருகியுள்ள நிலையில் அறுவடைக்கு பின்பு உளுந்து உள்ளிட்ட சிறுதானியங்கள் பயிரிட்டால், ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சாக் கோட்டை ஒன்றியத்தில் 5,851 எக்டேரில் விவசாய பரப்பு உள்ளது. இந்த ஆண்டு 4,100 எக்டேரில் நெல்விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 326 கண்மாயில் 10 சதவீத கண்மாய்கள் முழுமையாகவும், மீதி கண்மாய்கள் ஓரளவு தண்ணீருடனும் காணப்படுகிறது. சராசரி மழையளவு ஆண்டுக்கு 1001 மி.மீ.,இந்த ஆண்டு கடந்த நவம்பர் வரை 765 மி.மீ., மழை பெய்துள்ளது. ஆண்டு சராசரி இந்த மாத முடிவுக்குள் எட்டி விடும். தற்போது காற்றழுத்த தாழ்வு நிலையால், அவ்வப்போது தொடர், தூறல் மழை பெய்து வருகிறது. எனவே இந்த மழை நீரை விவசாயிகள் தேக்கி வைத்து, சிக்கனமாக பயன்படுத்த வேளாண் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். சாக்கோட்டை வேளாண் உதவி இயக்குனர் மணிவண்ணன் கூறும்போது: நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், அறுவடைக்கு பின்பு நீர் நிலையில் உள்ள தண்ணீரை கொண்டு நிலங்களில் பயறு வகைகளான உளுந்து, பாசிப்பயறு, தட்டை பயறு, துவரை, சிறுதானியங்களாக சோளம், கம்பு, ராகி, திணை, சாமை, குதிரைவாலி, வரகு, நிலக்கடலை சாகுபடி செய்து அதிக மகசூல் பெறலாம். நெல் பயிரினை காட்டிலும் உளுந்து, சிறுதானியங்களில் சாகுபடி செலவு குறைவு. உளுந்து 60 நாள் பயிர். ஒரு ஏக்கரில் 300 முதல் 400 கிலோ வரை உளுந்து சாகுபடி செய்யலாம். இதன் மூலம் ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை லாபமாக கிடைக்கும். கதிர்

அறுப்புக்கு முன்பு விதைக்கலாம். ஒரு ஏக்கருக்கு 10 கிலோ விதை தேவைப்படும். பூக்கும் நேரத்தில் மட்டும் டி.ஏ.பி., கரைசலை தெளிக்க வேண்டும். சாக்கோட்டை வேளாண் விரிவாக்க மையத்தில் உளுந்து வம்பன் 5 விதைகள் உள்ளன, என்றார். விபரங்களுக்கு: 94424 73786 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## <u>நீர்வரத்து அதிகரிப்பு</u>

ராஜபாளையம் : வடகிழக்கு பருவ மழை காரணமாக, மேற்குத்தொடர்ச்சி மலையில் இருநாட்களுக்கு முன் மழை பெய்தது. இந்த மழைநீர் சிறிய ஆறுகள் மூலம் ராஜபாளையம் அய்யனார்கோயில் ஆற்றில் சென்றது. வறண்டு கிடந்த ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து, நேற்று காலை Œற்று குறைந்தது. மலையில் மழை பெய்வதால், காட்டாற்று வெள்ளம் ஏற்பட லாம் என்பதால் மீட்புப்பணிக்கு வனம், தீயணைப்பு துறையினர் தயார் நிலையில் உள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>தாமிரபரணியில் 5வது நாளாக வெள்ளப்பெருக்கு</u>



நெல்லை: பாபநாசம் அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரால் தாமிரபரணியில் தொடர்ந்து வெள்ளம் பாய்கிறது. நெலலை, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக வடகிழக்கு பருவமழை வெளுத்து வாங்குகிறது. பாபநாசம் அணை நிரம்பிய நிலையிலும் தொடர்ச்சியாக அணைப்பகுதியில் மழை பெய்து வருகிறது. நேற்று பாபநாசம் அணை பகுதியில் 46 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

பாபநாசம் அணை நிரம்பிவிட்டதால், அணைக்கு வரும் உபரி நீர் அப்படியே திறந்து விடப்படுகிறது.மலைப்பகுதியில் மடை திறந்த வெள்ளம்போல தண்ணீர் ஓடி வருவதால் தாமிரபரணி ஆற்றில் 5வது நாளாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

## வாழையில் ஊடுபயிராக தக்காளி சாகுபடி

ரிஷிவந்தியம், : ரிஷிவந்தியம் அடுத்த கடம்பூர் பகுதியை சேர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகள். இப்பகுதியில் அதிகளவில் நெல், கரும்பு, சோளம் உள்ளிட்ட பயிர் களை சாகுபடி செய்கின்றனர். தற் போது போதிய நீரில்லாததால், இப்பகுதி விவசாயிகள் குறைந்த நீரில் அதிக விளைச்சல் தரக்கூடிய வெங்காயம், கத்தரி, தக்காளி, வாழை சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக சொட்டுநீர் பாசனமுறையில் பயிர் செய்யப்படும் வாழை அதிக விளைச்சல் கொடுக்கிறது. மேலும் இதனுடன் ஊடுபயிராக தக்காளியை பயிர் செய்வதால் அதிக லாபம் கிடைப்பதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர். வாழை இலையை திருக்கோவிலூர், சங்கராபுரத்தை சேர்ந்த வணிகர்கள் நேரில் தோட்டத்திற்கு வந்து வாங்கி செல்கின்றனர். இதனால் போக்குவரத்து செலவு, நேரம் குறைவதுடன், 3 மடங்கு லாபம் கிடைப்பதால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கால்நடைநோய் தகவல் தொடர்பு திட்ட முகாம்

விழுப்புரம், :விழுப்புரம் ஆட்சியர் அலுவலகத்தில் தேசிய கால்நடைநோய் தகவல் தொடர்பு திட்டம் குறித்த ஆய்வு கூட்டம் ஆட்சியர் சம்பத் தலைமையில் நடந்தது. இதில் அனைத்து கால்நடை உதவி மருத்துவர்களும், தங்கள் கால்நடை மருந்தகங்களுக்கு வரும் கால்நடைகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை விவரங்கள் மற்றும் நோய் கிளர்ச்சி விவரங்களை அந்தந்த ஊராட்சி ஒன்றிய கால்நடை மருந்தகங்களில் உள்ள கணினியில் பதிவு செய்ய வேண்டும். இப்பணி வருடத்தில் 365 நாளும் செய்ய வேண்டும். ஊராட்சி

ஒன்றியங்களில் உள்ள கணினிகள் முறையாக செயல்படுகிறதா? பதிவுகளை தினமும் செய்ய வேண்டும் என்று உதவிமருத்துவர்களை ஆட்சியர் சம்பத் கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் அப்சல், கால்நடை நோய் புலனாய்வு உதவி இயக்குநர் மகேந்திரன், கால்நடை உதவி மருத்துவர் சந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## புகையான் பூச்சி தாக்குதலில் இருந்து நெற்பயிரை பாதுகாக்க வேளாண் அதிகாரி ஆலோசனை

கலசப்பாக்கம், : நெல் சாகுபடி செய்த பயிர்களில் தற்போது பல்வேறு இடங்களில் புகையான் பூச்சி நோய் தாக்குதலால் நெற்பயிர்கள் பாதிக்கப் பட்டுள்ளது. இந்த தாக்குதல்களில் இருந்து விவசாயிகள் நெற்பயிர்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது குறித்து கலசப்பாக்கம் வட்ட வேளாண்மை உதவி இயக்குனர் சுந்தரம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: புகையான் பூச்சி தாக்குதலால் பாதிக்கப் பட்ட நெற்பயிர்கள் தீயில் தீய்ந்ததுபோல் மஞ்சள் அல்லது பழுப்பு நிறமாக காய்ந்து காணப்படும். முதிர்ச்சி அடைந்த பயிர்கள் காய்ந்து போகும். நீர்மட்டத்திற்கு மேல் இருந்த பயிரில் பூச்சிகள் ஒட்டிக் கொண்டிருக்கும். இந்த நோய் தாக்கினால் விவசாயிகள் அச்சப்பட வேண்டியதில்லை. இதை தடுக்க பல்வேறு நடைமுறைகள் உள்ளது. நடவு சாகுபடி செய்யும்போது நெருக்கமாக நடவு செய்யாமல் 30 செ.மீ. அளவுக்கு இடைவெளி விட வேண்டும். தேவைக்கு அதிகமாக தழைச் சத்து உரங்களை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். விளக்கு பொறி அமைத்து புகையானை அழிக்கலாம். வேப்ப எண்ணெய் 3 சதவீதம் அல்லது இலுப்பை எண்ணெய் 6 சதவீதம், வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம் ஆகிவை நிலப்பரப்பிற்கு ஏற்றவாறு தெளிக்கலாம். வயலில் நன்றாக தண்ணீர் வடிந்த பின்னர், செடிகளின் அடிப்பகுதியில் பூச்சிக்கொல்லிகளை தெளிக்க வேண்டும். நேரடியாக மருந்துகளை அடிப்பதை தவிர்க்க வேண்டும். புகையான் பூச்சி தாக்குதல்களை

கட்டுப்படுத்த வேளாண்மை துறை மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகினால் மேலும் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அரும்பு சாகுபடியில் விவசாயிகள் தீவிரம்

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதியில் உள்ள விவசாயிகள் நெற்பயிருக்கு மாற்றாக மலர் செடிகள் அதிக பரப்பில் பயிரிடுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதங்களில் அரும்பு சாகுபடியை விவசாயிகள் புதிதாக தொடங்குவர். இதற்கென விதை அரும்பு செடிகளை சித்தமல்லி, அகரபுத்தூர் ஆகிய பகுதிகளில் இருந்து வாங்கி வந்து நடவு பணியில் ஈடு படுவர். இதே போன்று இந்த ஆண்டும் மலர் சாகுபடியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஆண்டு மேலும் அதிக பரப்பில் மலர் சாகுபடி செய்யப்படும் என கூறப்படுகிறது. இந்த பகுதியில் கண்டமங்கலம், குருங்குடி, வீராணந்த புரம், கருணாகரநல்லூர், பழஞ்சநல்லூர் மேலும் பல்வேறு பகுதிகளில் அரும்பு சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

## நெற்பயிரை தாக்கும் கதிர்நாவாய் பூச்சி

பள்ளிபாளையம், : பள்ளிபாளையம் பகுதியில் கால் வாய் பாசனத்தில் நெல் பயிர்சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பயிர்கள் நன்கு செழித்து வளர்ந்து கதிர் பிடிக்கும் பருவத்தில் இருப்பதால் ஆங்காங்கே கதிர்நாவாய் பூச்சிகள் காணப்படுகிறது. இந்த பூச்சிகள் நெல் பயிரின் கதிர்களில் உள்ள சாற்றினை உரிஞ்சி பதர் நெல்களை அதிகரிக்கும். இதனால் விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்படும். இதை கட்டுப் படுத்திட மாலத்தியான் 400 மிலி மருந்தினை ஏக்கருக்கு 150 லிட்டர் நீரில் கரைத்து விசைத்தெளிப்பான் மூலம் தெளித்து பூச்சிகளை கட்டுப்படுத்தலாமென பள்ளிபாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் அசோக் தெரிவித்துள்ளார்.

## கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.40 லட்சத்தில் தடுப்பணை கட்ட நடவடிக்கை

பாலக்கோடு: பாலக்கோடு பகுதி கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் குமாரசெட்டி ஏரிக்கு கீழே ரூ.40 லட்சத்தில் தடுப்பணை கட்ட மாவட்ட கலெக்டர் உறுதி அளித்துள்ளதாக தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பொதுப்பேரவை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. பாலக்கோடு வட்டம் திம்மனஅள்ளியில் அமைந்துள்ள தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பொதுப்பேரவை கூட்டம் நடைபெற்றது. நிர்வாகக்குழு தலைவர் ரங்கநாதன் தலைமை வகித்தார். மேலாண்மை இயக்குநர் துர்காமூர்த்தி முன்னிலை வகித்தார். துணைத்தலைவர் சம்பங்கி வரவேற்றார். கூட்டத்தில் நிர்வாகக்குழு உறுப்பினர்கள், கரும்பு விவசாய அங்கத்தினர்கள் சுமார் 2000 பேர் பங்கேற்றனர். பொதுப் பேரவை கூட்டத்தில் தமிழக விவசாய சங்கத்தலைவரும், நிர்வாகக்குழு உறுப்பினருமான சின்னசாமி, சேகர், மாதப்பன், முன்னாள் எம்எல்ஏ சின்னராஜ், சாம்ராஜ், நஞ்சுண்டன், கிருஷ்ணன், விஜயேந்திரன், காளியப்பன், ரத்தினம், லட்சுமணன் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர். இதற்கு பதில் தெரிவித்து நிர்வாகக்குழு தலைவர் ரங்கநாதன் பேசியதாவது: சொட்டு நீர் பாசன வசதியை அனைவரும் பயன்படுத்தி நன்மை அடைய வேண்டும். பாசனத்திற்கு பயன்பட வேண்டிய தண்ணீர் வீணாக ஒகேனக்கல் காவிரியில் கலக்கிறது. இதனை தடுக்கும் வகையில் குமாரசெட்டி ஏரிக்கு கீழே ஒரு தடுப்பணை கட்ட வேண்டுமென கலெக்டரிடம் வலியுறுத்தப்பட்டது. இதன்பேரில், கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.40 லட்சத்தில் தடுப் பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதி கூறியுள்ளார். கரும்பு ஏற்றி வரும் லாரி டிரைவர்கள் மாமுல் கேட்டால், எங்களிடம் புகார் தெரிவித்தால் சம்பந்தப்பட்ட லாரி உரிமையாளரிடம் தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார். இந்த கூட்டத்தில் பால் கூட்டுறவு சங்கத்தலைவர் பாலகிருஷ்ணன்,

ஜெர்தலாவ் ஊராட்சி மன்ற தலைவர் ரவிச்சந்திரன் மற்றும் ஆலையின் அலவலர்கள், தொழிலாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையம், வேளாண் பொறியியல் துறையுடன் இணைந்து இப்கோ நிறுவனத்தின் சார்பில் வேளாண் கருவிகள், சொட்டுநீர் பாசன கருவிகள் கண்சாட்சி இடம்பெற்றிருந்தது.

**சம்பா நெல் விளைச்சலுக்காக நாற்று நடும்பணி தீவிரம்**

ஆனைமலை: பொள் ளாச்சியை அடுத்த ஆனை மலை சுற்றுவட்டார பகுதியல் தற்போது, சம்பா நெல் விளைச்சலுக்காக நாற்றுநடவு செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக இறங்கியுள்ளனர். பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதிகளில் தென் னைக்கு அடுத்தப்படியாக மானாவாரி விதைப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இதில் ஆனைமலை, கோட்டூர், கோபாலபுரம், அம்பாராம்பாளையம், வேட்டைகாரன்புதூர், மயிலாடும் பாறை, காளியாபுரம், ஒடையகுளம் உள்ளிட்ட பல கிராமங்களில் நெல் சாகுபடி அதிகளவில் நடக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பருவமழையை நம்பி விவசாயிகள் நெல்விதைப்பில் ஈடுபடுகின்றனர். இம்மாதம் ஆனைமலை பகுதியில் சம்பா நெல் விளைச்சலுக்காக விவசாயிகள் பலர் தங்கள் விளை நிலங்களில் நாற்று நடும் பணியை தொடங்கியுள்ளனர். இதில் சில இடங்களில் இயந்திரம் மூலம் நாற்றுநடவு பணியை மேற்கொண்டுள்ளனர். பருவ மழை ஒருபக்கம் இருந் தாலும், ஆழியார் அணையிலிருந்து பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறப்பு தொடர்ந்து இருப்பதால் ஆனைமலை கோட்டூர், ஒடையக்குளம் பகுதிகளில் சம்பா நெல் நாற்றுநடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

**கொப்பரை விலை அதிகரிப்பு**

கோபி, : கோபியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந்தோறும் வியாழனன்று கொப்பரை ஏலம் நடைபெறுவது வழக்கம்.

இங்கு நடைபெறும் கொப்பரை ஏலத்திற்கு கோபி, காராப்பாடி, குருமந்தூர், ஆயிபாளையம், கெட்டிசெவியூர், நடுப்பாளையம், மோளபாளையம், வெட்டையம்பாளையம், நம்பியூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான விவசாயிகள் கலந்து கொள்வது வழக்கம். இங்கு கடந்த சில வாரமாக கொப்பரையின் விலை தொடர்ந்து குறைந்து வந்தது. இந்நிலையில் நேற்று ஒரு கிலோ கொப்பரை அதிகபட்சமாக ரூ.90.75க்கும், குறைந்தபட்சமாக ரூ.87.25க்கும், சராசரியாக ரூ.88.75க்கும் விலை போனது. 128 மூட்டை கொப்பரை வரத்து இருந்த நிலையில், மொத்தம் ரூ.6 லட்சத்துக்கு விலை போனது. அதே நேரத்தில் கடந்த வாரம் அதிகபட்சமாக ரூ.83.93க்கும், குறைந்தபட்சமாக ரூ.74.59க்கும் விலை போனது. கடந்த வாரம் 167 மூட்டை கொப்பரை வரத்து இருந்த நிலையில், ரூ.8 லட்சத்திற்கு விலை போனது. இந்த வாரம் 128 மூட்டை கொப்பரை ரூ.6 லட்சத்திற்கு விற்பனையாகி உள்ளது. இது கடந்த வாரத்தை விட இந்த வாரம் கிலோ ஒன்றுக்கு ரூ.7 அதிகரித்து இருந்தது. கடந்த சில நாட்களாக கொப்பரைக்கு உரிய விலை கிடைக்காமல் இருந்த நிலையில், இந்த வாரம் விலை உயர்ந்திருப்பது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## பதியன் நாற்று பெற விவசாயிகளுக்கு அழைப்பு

மஞ்சூர்: தேயிலை தோட்டங்களில் நடவு செய்ய பதியன் நாற்று தேவைப்படும் விவசாயிகள் தோட்டக்கலை துறையை அணுகலாம் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மஞ்சூர் அருகே உள்ள எடக்காட்டில் குறை தீர்ப்பு நாள் கூட்டம் நடைபெற்றது. இதில் தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறியதாவது: மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் சுமார் 4 ஆயிரம் ஹெக்டர் பரப்பில் தேயி லை விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பகுதி தேயிலை விவசாயிகள் நலன் கருதி தோட்டக்கலை துறை சார்பில் பல்வேறு திட்டங்கள், சலுகைகள் மற்றும் மானியங்கள் வழங்கப்

படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் தேயிலை விவசாயி களுக்கு சுமார் 7 லட்சம் நாற்றுகள் தோட்டக்கலை துறையின் மூலம் வழங்கப் பட்டுள்ளது. 50 சதவீதம் மானியத்துடன் வழங்கப் பட்டதால் பெரும்பாலான விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். மேலும் காய்கறி விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும் பல்வேறு விளை பொருட் கள் வழங்கப்பட்டுள்ளன. கை தெளிப்பான்கள், ஆயில் இன்ஜின் போன்ற வை களை உபயோகப்படுத்தும் விவசாயிகள் தக்க ஆவணங் களை வழங்கினால் 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். தற்போது பதியன் நாற்று தேவைப்படும் தேயிலை விவசாயிகள் தோட்டக்கலை துறை உதவி வேளாண்மை அலுவலர்களை சந்தித்து மானியத்தில் பதியன் நாற்றுகளை பெற்று பயன் பெறலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## 6,030 டன் யூரியா திருச்சிக்கு வந்தது

திருச்சி: வட மாநிலம் மற்றும் காரைக்கால், சென் னையில் இருந்து 6,030 டன் யூரியா திருச்சி வந்தது. அது போல் 2,600 டன் அரிசி ஆந்திராவில் இருந்து வந்தது. டெல்டா மாவட்டங்களில் விவசாய பணிகள் முழுவீச்சில் நடந்து வரு கிறது. கடந்த மாதம் டெல்டா மாவட்டங்களில் யூரியாவிற்கு கடும் தட்டுப் பாடு ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் உரிய நேரத் தில் பயிர்களுக்கு யூரியா இடமுடியாமல் அவதிக்குள்ளாயினர். இதனால் பல இடங்களில் யூரியா தட் டுப்பாடு இல்லாமல் வழங்க கோரி சாலை மறியல் உள் ளிட்ட போராட்டங்கள் நடைபெற்றது. இதையடுத்து யூரியா உள்ளிட்ட உரங்கள் வெளிநாடுகள், மற் றும் வெளி மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் நேற்று வட மாநிலங்களில் இருந்து 58 வேகன்களில் 3,500 டன் யூரியா சரக்கு ரயிலில் திருச் சிக்கு வந்தது. இவை லாரி களில் ஏற்றப்பட்டு திருச்சி மாவட்டத்தில் உள்ள வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பப்பட்டது. அதுபோல் தனியார் நிறுவனத்திற்காக காரைக்காலில் இருந்து 21 வேகன்களில் 1,280 டன் யூரியா மற்றும் சென்னை துறைமுகத்தில் இருந்து 1,250 டன்

யூரியா திருச்சி குட்ஷெட் வந்து சேர்ந்தது. அதேபோல் மத்திய அர சிடம் இருந்து ரேசன் கடைகளுக்கு விநியோகம் செய்வதற்காக ஆந்திராவில் இருந்து 41 வேகன்களில் 2,600 டன் புழுங்கல் அரிசி நேற்று குட்ஷெட் வந்தது. இந்த அரிசி மூட்டைகள் கே.கே.நகரில் உள்ள மத்திய சேமிப்பு குடோனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த அரிசி தேவைக்கேற்ப பல்வேறு மாவட்ட ரேசன் கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம்

குளித்தலை: குளித்தலை பாரத ஸ்டேட் வங்கி சார்பில் விவசாயி களுக்கான விழிப்புணர்வு முகாம் குளித்தலையை அடுத்த வீரப்பூர் கிராமத்தில் நடைபெற்றது. இதில் கால்நடை பராமரிப்பு, தரிசுநில சாகுபடி மற்றும் விவசாயம் சார்ந்த ஆலோசனை வழங்கப்பட்டது. குளித் தலை பாரத ஸ்டேட் வங்கி கிளை முதன்மை மேலளார் நாகராஜன் தலைமை வகித்தார். உதவி பொதுமேலாளர் பத்மநாபன், விவசாயிகள் அசோக், மாரியப்பன், ராஜூ முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக ஸ்டேட் வங்கி திருச்சி மண்டல பொதுமேலாளர் சிவகுமார், குறித்த காலத்தில் கடனை திருப்பி செலுத்திய வாடிக்கை யாளர்களை கவுரவித்து பேசினார். விவசாயிகள் வங்கியில் பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பி செலுத்த வேண்டும். தாமதமாகும் கடன் தொகைக்கு அபராதமோ, நீதிமன்ற வழக்குகளுக்கோ செல்லாமல் வங்கியின் மூலம் நடைபெறும் மக்கள்நீதிமன்றம் மூலம் விவசாயிகள் சமரச தீர்வு ஏற்பட்டு கடனை திருப்பி செலுத்த முன்வரவேண்டும். மேலும் விவசாயிகள் இப்பகுதியில் இருக்கும் தரிசு நிலங்களை சாகுபடி நிலங்களாக மாற்றி விவசாயத்தில் நல்ல முன்னேற்றம் அடைய தங்களை தயார்படுத்திக்கொள்ள முன்வரவேண்டும் என்றார். வேளாண் இயக்குநர் சேகர், ஆவின் துணை பதிவாளர் முத்துகிருஷ்ணன், பாரத ஸ்டேட் வங்கி அதிகாரி முத்துப்பாண்டி, விவசாய அதிகாரி ரெஜினா ஆகியோர் கலந்து கொண்டனர். விவசாய அதிகாரி அருள்பிரியா நன்றி கூறினார்.

**<u>பூச்சி மருந்து தயாரிக்க பயன்படும் கண்வலிகாய், கிழங்கு அறுவடை சீசன் ஒரு கிலோ ரூ.200க்கு விற்பனை</u>**

க.பரமத்தி: க.பரமத்தி பகுதியில் கண் வலிக்காய் மற்றும் கிழங்கு அறுவடை நடைபெற்று வருகிறது. ஒரு கிலோ ரூ.200க்கு விலை போவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பூச்சி மருந்து தயாரிப்பதற்கு கண்வலிக்காய் மற்றும் கிழங்கு பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் கரூர் மாவட்டம் க.பரமத்தி மற்றும் சுற்று வட்டார பகுதி களிலும், வெளி மாவட்ட பகுதிகளான மூலனூர், ஒட்டன்சத்திரம், ஜெயம்கொண்டம், நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் கண்வலிக்காய் மற்றும் கிழங்கு அதிகமாக பயிரிடப்படுகிறது. க.பரமத்தி மற்றும் மூலனூர் பகுதியில் பயிரிடப்படும் கண்வலிக்காய் மற்றும் கிழங்குகளை ஆந்திரா, விஜயவாடா, ஒரிசா, பெங்களூர் போன்ற வெளிமாநில வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். இதற்காக வாரம் ஒருமுறை க.பரமத்தியில் முகாமிட்டு சிறு விவசாயிகளிடம் கண்வலிக்காய், கிழங்கு களை பெற்று மொத்தமாக விற்பனை செய்கின்றனர். இது குறித்து வியாபாரி பழனிசாமி கூறியதாவது: கண்வலிக்காய் பூச்சி மருந்து தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. கண்வலிகாய் அனைத்து பகுதியிலும் கிடைப்பதில்லை. தமிழகத்தில், திருப்பூர் மாவட்டத்தில் மூலனூர் மற்றும் சுற்று வட்டார பகுதியிலும் க.பரமத்தி ஒன்றிய பகுதியிலும் பயிரிடப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் கண்வலி காய் மற்றும் கிழங்குகள் ஒரு கிலோ 200 ரூபாய்க்கு விலை போகிறது. மற்ற பகுதியில் விளைச்சல் குறைவாகவும், காய் மற்றும் கிழங்கு பருமன் குறைவாக இருப்பதால், விலை சற்று குறைவாக உள்ளது என தெரிவித்தார். நல்ல விலை போவதால் கண்வலிகாய் மற்றும் கிழங்கு பயிரிட்டுள்ள க.பரமத்தியை சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர்.

## <u>உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 299 பயனாளிகளுக்கு ரூ.35.58 லட்சம் நலஉதவி</u>

அரியலூர், : உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 299 பயனாளிகளுக்கு ரூ. 35.58 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார். அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழக அரசின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமை வகித் தார். அப்போது, அரியலூர் தாலுகாவை சேர்ந்த 138 பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகை ரூ. 11 லட்சத்து 86 ஆயிரம் மதிப்பிலும், 157 பயனாளிகளுக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமசடங்கு உதவித்தொகை ரூ. 19 லட்சத்து 62 ஆயிரத்து 500 மதிப்பிலும், 4 பேருக்கு விபத்து நிவாரண உதவித்தொகை ரூ. 4 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பிலும் ஆக மொத்தம் 299 பேருக்கு ரூ. 35 லட்சத்து 58 ஆயிரத்து 500 மதிப்பிலான நலதிட்ட உதவிகளை கலெக்டர் சரவணவேல்ராஜ் வழங்கினார். நிகழ்ச்சியில், கலெக்டரின் நேர்முக உதவியாளர் முஸ்தபா கமால்பாட்ஷா, துணை கலெக்டர் சீனிவா சன், சமூக பாதுகாப்புத்திட்ட தாசில்தார் தாரகேஸ்வரி, உதவி கலெக்டரின் நேர்முக உதவியாளர் தண்டாயுதபாணி மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## <u>அதிக மகசூல் பெற தரமான விதைகளையே பரிந்துரைக்க வேண்டும் அலுவலர்களுக்கு அதிகாரி அறிவுறுத்தல்</u>

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வந்த பருவ மழையை பயன்படுத்தி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சம்பா நெல் சாகுபடி பணிகளில் விவசாயிகள் மும்முரமாக மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர். இவர்களுக்கு தரமான விதைகள், போதுமான யூரியா, உரம் மற்றும் இடுப் பொருட்கள் ஆகியவற்றை தட்டுப்பாடின்றி வழங்க வேளாண் துறை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும்,

உரங்களை பதுக்கிவைத்து செயற்கையாகத் தட்டுப்பாடு உருவாக்கி, அதிக விலைக்கு விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது. இதுதொடர்பாக பல்வேறு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், புதுக் கோட்டை மாவட்டத்தில் உள்ள விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் விதைச் சான்று பணிகளை கோயம்புத்தூர் விதைச் சான்று இணை இயக்குநர் பழனிச்சாமி திடீர் ஆய்வு மேற்கொண்டார். விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் விதைச் சான்று பணிகளை ஆய்வு மேற்கொண்ட அவர், விதைச் சான்று அலுவலர்களுக்கு சான்று விதைகளின் முக்கியத்துவம், அவற்றின் தரத்தை பேணவேண்டியதின் அவசியம் குறித்து அறிவுறுத்தினார். அப்போது அவர் பேசுகையில், தரமான விதைகளின் மூலமாகத் தான் விவசாயிகள் அதிக மகசூல் பெற முடியும். அதன் மூலமாகவே அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும். குறிப்பாக, தரமான விதைகளை விவசாயிகளிடம் கொண்டுசேர்க்க வேண்டிய உயரிய பொறுப்பு உங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் அதிக மகசூல் பெற ஏதுவாக தரமான விதைகளை முழுமையாக ஆய்வு செய்து அவற்றையே பரிந்துரைக்க வேண்டும். அத்துடன் விவசாயிகளை அதிக அளவில் விதைப் பண்ணை உற்பத்தியில் ஈடுபடச்செய்ய வேண்டும் என் றார். பின்னர், அண்ணா பண்ணைக்கு சென்ற அவர், பாசிப்பயறு , நிலக்கடலை மற்றும் நெல் விதைப் பண்ணைகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த தோடு தரமான விதை உற்பத்திக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கினார். ஆய்வின் போது புதுக்கோட்டை விதைச்சான்று உதவி இயக்குநர் வைத்தியநாதன், விதைச்சான்று அலுவலர்கள் பாண்டியன், நல்லமுத்துராஜா ஆகியோர் உடன் சென்றனர்.

## வேப்பத்தூரில் விவசாயிகள் சங்க அமைப்பு கூட்டம்

திருவிடைமருதூர்: திருவிடைமருதூர் அருகே வேப்பத்தூரில் விவசாயிகள் சங்க அமைப்பு கூட்டம் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடந்தது. வேப்பத்

தூர் வழியாக ஓடும் காவிரியின் குறுக்கே மோட்ட வாய்க்கால் தலைப்பில் தடுப் பணை கட்ட முடிவு செய்து இன்னும் வேலை துவக்கப் படாமல் உள்ளது. மேலும் காலதாமதமின்றி உடனடியாக தடுப்பணை கட்டும் பணியை துவங்க வேண் டும். உடனடியாக வாய்க்கால்களை சர்வே செய்து தூர்வாரி விவசாயத்தை பாதுகாக்க வேண்டும். தற்போது பயிர்களுக்கு காப்பீடு செய்யும் காலக்கெடுவை நீட்டிப்பு செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாவட்ட பொருப்பாளர்கள் ஜீவபாரதி, சங்கர், பக்கிரிசாமி உட்பட 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

<u>**பூதலூர் வட்டாரத்தில் 50% மானியத்தில் நெல் நுண்ணூட்டம் விவசாயிகளுக்கு அழைப்பு**</u>

திருக்காட்டுப்பள்ளி, : பூதலூர் வேளாண்மை வட்டாரத்துக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் நெல் நுண்ணூட்டம் 50 சத வீத மானியத்தில் விநியோ கம் செய்யப்படுகிறது. பூதலூர் வேளாண்மை உதவி இயக்குனர் பிரபாகர் வெளியிட்டுள்ள அறிக்கை: குடுமியான்மலையில் உள்ள தமிழக அரசின் மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் தயார் செய்து பெறப்பட்டு ள்ள நெல் நுண்ணூட்டத்தில் இரும்பு, மாங்கனீசு, துத்தநாகம், தாமிரம், போரான், மக்னீசியம் ஆகிய நுண்சத்துக்கள் உள்ளன. இதை நெல் நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு 5 கிலோ நுண் ணூட்டத்தை 20 கிலோ மண லுடன் கலந்து கடைசி உழ வுக் குபின் தூவி விட வேண்டும். இதனால் அதிக சிம்பு கள் வெடித்து தூர்கட்டும். கதிர்கள் வாளிப் பாக வெளி வரும். நெல் மணி கள் பருமனாக இருக்கும். இதன் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.29.20 ஆகும். இதில் நெல்லுக்கான தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் 50 சதவீத மானியம் அளிக்கப்படுகிறது. விவசாயிகள் உதவி வேளாண்மை அலுவலரின் பரிந்துரை பெற்று விரி வாக்க மைய த்தில் பெற்று கொள் ள லாம். இதுவரை மானியத் தில் 4,375 கிலோ நெல் நுண்ணூட்டம்

வழங்கப்பட்டுள் ளது. தற்போது மேலும் கூடு தலாக 1,500 கிலோ பெறப் பட்டு வழங்கப்படவுள் ளது. உய்யக்குண் டான், புதிய கட் டளை மேட்டுக்கால்வாய் மூலம் பாசனம் பெறும் ஏரிப்பாசன விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படை யில் வழங்கப் படும். இதை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ் வாறு பூதலூர் வேளா ண்மை உதவி இயக்குனர் பிரபா கர் தெரிவித்துள்ளார்.

## சம்பா, தாளடியில் புகையான் தாக்குதலை கட்டுப்படுத்த வழிமுறை அதிகாரி ஆலோசனை

வலங்கைமான், : வலங்கைமானில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா மற்றும் தாளடி பயிர்களில் சில இடங்களில் புகையான் மற்றும் குருத்துபூச்சி தாக்குதல் தென்படுகிறது. அதை உரிய நேரத்தில் கட்டுப்படுத்தி பொருளாதார இழப்பினை தடுத்திட வேண்டுமென வேளாண் உதவி இயக்குநர் தேவேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார். திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் தாலுகாவில் 14,344 ஹெக்டேர் பரப்பளவில் சம்பா மற்றும் தாளடி பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளது. இதில் சம்பா பருவ பயிர்கள் கதிர்வரும் நிலையிலும் தாளடி பயிர்கள் சூல்கட்டும் பருவத்திலும் உள்ளது. தற்போது உள்ள பருவநிலையின் காரணமாக ஒரு சில இடங்களில் நோய்தாக்குதல் தென்படுகிறது. இதில் புகையானால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள் வட்ட வட்டமாக வளர்ச்சி குன்றிய நிலையிலும் எரிந்த தோற்றம்போல் காட்சியளிக்கும். இதனைக் கட்டுப்படுத்த அளவுக்கு அதிகமாக தழைசத்து இடுவதை தவிர்க்க வேண்டும். மேலும் வயலில் தங்கியுள்ள நீரை உடனடியாக வடித்துவிடவேண்டும். நெற்பயிரில் பட்டம் பிரித்து காற்றோட்ட வசதி ஏற்படுத்த வேண்டும். வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம் அல்லது இமிடோகுளோர்பிட் 100 மிலி அல்லது புப்ரோபெசின் 200 மிலி ஏக்கருக்கு என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். பைரித்ராய்டு வகை மருந்துகள் தெளிப்பதை தவிர்க்க வேண்டும். அதேபோல் நெற்பயிரில் குருத்துப்பூச்சி தாக்கியிருப்பின் நடுக் குருத்து காய்ந்து

காணப்படும் கதிர் வெளிவந்த நிலையில் வெண்கதிர் காணப்படும். காய்ந்து உள்ள நடுக்குருத்தை கையால் பிடித்து இழுத்தால் எளிதாக வந்து விடும். இதை கட்டுப்படுத்த அதிக தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும். வாய்க்கால் வரப்புகளை களைகள் இல்லாமல் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். புரோபணோபாஸ் 400 மிலி ஏக்கருக்கு அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 200 கிராம் அல்லது ட்ரையசோபாஸ் 400 மிலி ஏக்கருக்கு என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம் என வலங்கைமான் வேளாண் உதவி இயக்குநர் தேவேந்திரன் கூறியுள்ளார்.

## <u>பயிர்களை சேதப்படுத்தும் எலிகளை அழிப்பது எப்படி? வேளாண் அதிகாரி ஆலோசனை வேளாண் அதிகாரி ஆலோசனை</u>

வலங்கைமான்: வலங்கைமான் வேளாண்மை உதவி இயக்குநர் தேவேந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தற்போது நெற்பயிர் களுக்கு எலிகளால் பாதிப்பு உண்டாகும் சூழ்நிலை உள் ளது. திருவாரூர் மாவட்டத் தில் 6 வகை எலிகள் காணப்படுகிறது. 1. வயல்எலி 2. வரப்புஎலி (அ) புல்எலி, 3. சுண்டெலி, 4. வெள்ளெலி, 5. வீட்டு எலி, 6. பெருச்சாளி. இவற்றில் வயல் எலி, புல் எலி, சுண்டெலி ஆகிய மூன்று வகை எலிகளால் பயிர்களுக்கு அதிகம் சேதம் ஏற்படுகிறது. எலிகள் உணவு பயிர்களை உண்பதைவிட வீணாக்குவது அதிகமாகும். சுமார் 15 முதல் 20 வரை ஆண் எலி தலைமையில் கூட்டமாக வாழும். எலிகள் இரவில் சுமார் 2-3 கி.மீட்டர் இடம் பெயரும் திறமை உள்ளது. தற்போது உள்ள பயிர் நிலையில் வேறு இடங்களிலிருந்து நல்ல சூழ்நிலை, இருப்பிட வசதி, உணவு வசதி உள்ள வயல்வெளிக்கு, வரப்புகளுக்கு எலிகள் இடம்பெற வாய்ப்புள்ளது. இதை தடுக்க வயல்களில் ஒரு ஏக்கருக்கு 10 இடங்களில் பறவை குடில், பருந்து, கோட்டான், ஆந்தை அமர்வதற்கு வசதி யாக தென்னை அடிமட்டை அல்லது 5-6 அடி உயரத்தில் மூங்கில், மரக்கம்புகள் அமைத்தால் இரவில்

ஆந் தை, கோட்டான், அமர்ந்து வேறிடத்திலிருந்து வரும் எலிகளை பிடித்து உண்னும். தஞ்சாவூர் கிட்டிகள் என்ற எலி பிடிக் கும் பொறிகள் டெல்டாவில் பிரபலமான வை. இவற்றை பயிர் நன்கு வளர்ந்த நிலையில் ஒரு ஏக்கருக்கு 100 கிட்டிகள் வைத் தால் எலிகளை பிடி த்து அழிக்கலாம். சிங்க் பாஸ் பைடு, புரோமடயலான் ஆகிய நச்சு மருந்துகளை அரிசி குருணை, நெல் பொறி யுடன் கலந்து வைத்தால் எலிகளை அழிக்கலாம். ஒரு ஏக்கர் வயல் பரப்பின் நான்கு வரப்புகளிலும் எலிகளின் புதிய இருப்பிடம் தென்பட்டால் 10-15 இடங்களில் விஷம் கலந்த உணவு வைத்தும் எலிகளை கட்டுப்படுத்தலாம். புரோமடயலான் துகள்மருந்து 20 கிராம் மருந்தை 1 கிலோ பச்சை அரிசி, குருணை, 100 கிராம் நாட்டு சர்க்கரை, 20 மிலி தேங்காய் எண்ணெயுடன் கைப்படாமல் குச்சியால் கிளறி அவற்றை 2 ஸ்பூன் அளவு சிறிய பேப்பர் பொட்டலங்களாக தயார் செய்து வரப்புகளில் எலிகள் நடமாட்டம் உள்ள இடங்களில் போட் டால் அவை எடுத்து செ ன்று வளைகளுக்குள் வை த்து பொட்டலங்களை கடி த்து உணவினை தின்று இரண்டு மூன்று நாட்களில் இறந்து விடும். வரப்புகளை கோடை காலத்தில் உடைத்து சிறிய வரப்புகளாக மாற்ற வேண்டும். பயிர்களுக்கு பட்டம் விட்டு நடவு செய்தல், போதிய இடை வெளி நல்ல காற்றோட்டம், சூரிய ஒளி கிடைக்குமாறு பராமரிக்க வேண்டும். புதிய வளை தோண்டிய இடத்தை அறிந்து வரப்பை வெட்டி எலிகளை பிடித்து அழிக்கலாம். பழைய வைக்கோல் போர்களை அகற்ற வேண்டும். நெற்களங்களை சுத்தமாக வைக்க வேண்டும். காற்றில் சப்தம் எழுப்புமாறு பாலிதீன் கொடிகளை வரப்பு ஓரங்களில் வைத்தால் எலிகள் பயந்து வராது. பொதுவாக சாரைப்பாம்பு, நாக பாம்பு கள் எண்ணிக்கை அதிகம் இருந்தால் எலிகளை பிடித்து உண்னும். அதே போன்று கீரி, பருந்து, ஆந்தை, கோட்டான், நரி இனங்களை அழிக்காமல் இருக்க வேண்டும். இவ்வாறு தேவேந்திரன் கூறியுள்ளார்.

## டிச.19ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

ராமநாதபுரம், : ராமநாதபுரத்தில் நடை பெறும் குறைதீர் கூட்டத் தில் பங்கேற்க விவசா யிகளுக்கு அழைப்பு விடுக் கப் பட்டுள் ளது. ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட் டம் வருகிற 19ம் தேதி காலை 11.30 மணிக்கு, மாவட்ட கலெக் டர் அலுவலகத் தில் நடை பெற உள்ளது. கலெக்டர் நந்தகுமார் தலைமையில் நடை பெறும் இக்கூட்டத்தில் விவசாயிகளும், விவசாய சங்க பிரதிநிதிகளும் பங்கேற்று, விவசா யம் தொடர்பாக விவாதிக்கலாம்.

## பாசனத்திற்கு வைகையில் நீர் திறப்பு

திருப்புவனம், : வைகைஅணையில் இருந்து மதுரை, சிவகங்கை மாவட்ட பாசனத்திற்கு கடந்த 9ம் தேதி 2ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப் பட்டது. அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் விரகனூர் மதகு அணையில் இருந்து இடது பிரதான கால்வாய் மூலம் மதுரை மாவட்டத்துக்குட்பட்ட சக்கிமங்கலம், அங்காடிமங்களம், கார்சேரி, குன்னத்தூர், சக்குடி கண்மாய்களுக்கும், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த பூவந்தி, மடப்புரம், அதிகரை, ஆகிய கிராமங்களில் உள்ள 10 கண்மாய்களுக்கும் நீர் திருப்பி விடப்பட்டது. வலது பிரதான கால்வாயில் இருந்து கொந்தகை, கழுகேர்கடை, மணலூர், திருப்புவனம் உள்ளிட்ட 4 கண்மாய்களுக்கும் தண்ணீர் திருப்பிவிடப்பட்டுள்ளது. வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட தட்டான்குளம் படுகை அணையின் மூலம் பிரமனூர், லாடனேந்தல், பழையனூர் உட்பட 16 கண்மாய்களுக்கும், லாடனேந்தலில் கட்டப்பட்ட படுகை அணை மூலம் மாரநாடு, திருப்பாச்சேத்தி உள்பட 20 கிராம கண்மாய்களுக்கும் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மாங்குடி, மேலவெள்ளூர் உட்பட 3 கண்மாய்களுக்கும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மேலும் திருப்புவனத் தை அடுத்துள்ள பல்வேறு கண்மாய்களுக்கும் பாசனத்திற்கு திறக்கப்

பட்ட நீர் செல்வதால் இந்தாண்டு மானாமதுரை, திருப்புவனம் தாலுகா வுக்கு உட்பட்ட 20 ஆயிரம் ஹெக்டேர் நிலங்கள் பயன்பெற உள்ளன. பெரும்பாலான விவசாயிகள் நெல் நடவு பணிகளை முடித்து விட்டனர். கடந்த மாதம் தொடங்கிய வடகிழக்கு பருவ மழை மூலம் விவசாயிகள் நாற்றாங்கால் அமைத்து பணிகளை விரைவாக தொடங்கிவிட்டனர். எல்எல்ஆர், டீலக்ஸ் பொன்னி, கல்சர் பொன்னி போன்ற 90 நாள் பயிர்களை நடவு செய்துள்ளனர். மோட்டார் பாசன விவசாயிகளுக்கு கிணற்றில் ஊற்று அதிகரித்துள்ளதால் ஒரு போக சாகுபடிக்கு தயாராக பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>ஆனைமலை பகுதியில் பலத்த மழை: ஆறுகளில் வெள்ளப்பெருக்கு 2 கடைகள் அடித்துச்செல்லப்பட்டன</u>**



ஆனைமலை பகுதியில் பெய்த பலத்த மழையால் உப் பாறு, வகறையாறு மற் றும் காண்டூர் கால்வா யில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

பலத்தமழை

மேற்கு தொடர்ச்சி மலைய டிவாரத்தில் அமைந்துள்ள ஆனைமலை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த சில வாரங்களாக மழை பெய்யாமல் வெயில் அடித்து வந்தது. நேற்று முன்தினம் மாலை வானத்தில் கருமேகங் கள் சூழ்ந்தன. பின்னர் மாலை சுமார் 6.30 மணிக்கு திடீரென இடி-மின்ன லுடன் பலத்த மழை பெய்ய தொடங்கியது. இதனால் சாலைகளில் தண்ணீர் பெருக் கெடுத்து ஓடியது. ஒரு சில இடங்களில்மின்தடையும்ஏற்பட்டது.

வெள்ளப்பெருக்கு

இரவிலும் பலத்த மழை பெய்ததால் மேற்குத் தொடர்ச்சி மலைச்சரிவு களில் உருவாகி ஆழியாற்றில் சங்கம மாகும் உப்பாறு மற்றும் வகறை யாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. உப்பாற் றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக் கின் காரணமாக மாசாணியம் மன் கோவில் அருகில் உள்ள தரைப் பாலம் மூழ்கியது. மேலும் அதே பகுதியில் இருந்த 2 பெட்டிக் கடைகளும் வெள் ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. தொடர்ந்து இரவு 12.30 மணி வரை சுமார் 6 மணி நேரம் பெய்த கன மழையால் காண்டூர் கால்வாயிலும் காட்டாற்று வெள்ளம் புகுந்தது. இதனையடுத்து கால்வாயில் தண்ணீர் ததும்பியபடி செல்லத்தொடங்கியது. நீர் வரத் தைக் கண்காணித்த பொதுப் பணித்துறையினர் உடனடி யாக சர்க்கார்பதி நீர் மின் நிலையத்தில் மின் உற்பத்தியை நிறுத்தி வைக்க நடவடிக்கை மேற் கொண்ட னர். உபரி நீர் வரத்து குறைந்ததின் காரண மாக காண்டூர் கால்வாயில்நீர்வரத்துகுறைந்தது.

நல்லாறு

இந்த நிலையில் நேற்றுகாலை ஆறுகளிலும், காண்டூர் கால் வாயிலும் வெள்ளம் குறைந் தது. இதையடுத்து நேற்று காலை முதல் மீண்டும் சர்க்கார்பதியில் மின்உற்பத்தி தொடங்கப்பட்டு, உபரி நீர் காண்டூர் கால்வாயில் திறந்து விடப்பட்டது. இதே போல் நேற்று முன்தினம் இரவுபொள் ளாச்சி பகுதியிலும் பலத்த மழை பெய்தது. நேற்று காலை முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிக பட்சமாக நல்லாறில் 25 மி.மீ., மழையும், சோலையாரில் 20 மி.மீ., பொள்ளாச்சியில் 11 மி.மீ., வேட்டைக்காரன் புதூரில் 9 மி.மீ. மழை பதிவாகி இருந்தது.

மீண்டும்மின்உற்பத்தி

இது குறித்து பொதுப்பணித் துறையினர் கூறியதாவது:-
சர்க்கார்பதி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் திடீ ரென பெய்த கனமழை காரண மாக உப்பாறு, வகறையாறு மற்றும் காண்டூர் கால்வாய் களில் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டது. இதனையடுத்து காண்டூர் கால்வாயின் பாது காப்பு கருதி நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல்

நேற்று காலை 10 மணி வரை மின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட் டது. இதன் காரணமாக உபரி தண்ணீர் கால்வாய்க்கு செல்வது தடுக்கப் பட்டது. 12 மணி நேரம் தொடர்ந்து நீர் வரத்து கண்காணிக்கப்பட்டு நீர்வரத்து குறைந்ததால் நேற்று காலை 10 மணிமுதல் மீண்டும் மின் உற்பத்தி நடைபெற்று வருகிறது. தற்போது சர்க்கார்பதி நீர்மின் நிலையத்தில் 26 மெகாவாட் மின் உற்பத்தி நடைபெறு வதுடன் உபரி நீர் வினாடிக்கு 900 கனஅடி வீதம் காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு சென்று கொண்டி ருக் கிறது. தொடர்ந்து வெள்ள நீரின் அளவு கண்காணிக்கப் பட்டு வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## <u>நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் பண்ணைக்குட்டைகளில் மீன் குஞ்சுகள் விடப்பட்டன</u>



கடலூர் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் பண்ணைக்குட்டை களில் மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

<u>சிறப்பு முகாம்</u>

கடலூர் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் பண்ருட்டி, விருத்தாசலம், நல்லூர் வட்டாரங்களில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைக்குட்டைகள் மற்றும் கிராமக்குட்டைகளில் மீன்வளர்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு மீன்குஞ்சுகள் விடுவதற்கான சிறப்பு முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் மாநில அரசின் மீன்வளத்துறையிடம் இருந்து பெறப்பட்ட 15 ஆயிரத்து 300 ரோகு, கட்லா ரக மீன்குஞ்சுகள் பண்ணைக்குட்டைகளில் விடப்பட்டன. பண்ருட்டி வட்டாரத்தில் வேகாக்கொல்லையில் உள்ள ஒரு பண்ணை குட்டையிலும், புறங்கணி நீர்வடிப்பகுதியில் 2 கிராமக்குட்டைகளிலும், விருத்தாசலம் வட்டாரம் பரவளூர், சாத்தியம் கிராமங்களில் 12

பண்ணைக்குட்டைகளிலும், நல்லூர் வட்டாரம் ஏ.சித்தூர் கிராமத்தில் 2 கிராம குட்டைகளிலும் மீன்குஞ்சுகள் விடப்பட்டன. இந்த முகாமுக்கு மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் திட்ட மேலாளர் அருள்பிரகாசம் தலைமை தாங்கி பண்ணைக்குட்டைகளில் மீன்குஞ்சுகளை விட்டார். வேளாண்மை உதவி இயக்குனர் பூங்கோதை, உதவி பொறியாளர் ஜெயக்குமார், நீர்வடிப்பகுதி சங்கத்தலைவர்கள் ராஜா(வேகாக்கொல்லை), ராஜலட்சுமி(புறங்கணி), சுப்பிரமணியன்(சாத்தியம்), குமுதா(பரவளூர்), மலர்(ஏ.சித்தூர்) மற்றும் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்த தகவலை நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் திட்ட அதிகாரியும், மாவட்ட வேளாண்மை இணைஇயக்குனருமான தனசேகரன் தெரிவித்துள்ளார்.

## <u>விவசாயிகளுக்கு மானிய விலையில் இயந்திரங்கள், கருவிகள் வழங்கப்படும் கலெக்டர் சுரேஷ்குமார் தகவல்</u>



கடலூர், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட இருப்பதாக கடலூர் மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

<u>வேளாண் இயந்திரங்கள்</u>

கடலூர் மாவட்டத்தில் 2014–15–ம் ஆண்டில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்துக்கான அரசாணை பெறப்பட்டுள்ளதால் விவசாயிகள் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். அட்டவணை, பழங்குடியின விவசாயிகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் முறையே குறைந்தபட்ச மானியம் ரூ.10

ஆயிரம் முதல் அதிக பட்ச மானியம் ரூ.2 லட்சம் வரை வெவ்வேறு வேளாண் கருவி இனங்களுக்கு தக்கவாறு வழங்கப்பட உள்ளது. 2014–15–ம் நிதி ஆண்டில் மேற்கண்ட பிரிவினருக்கு இம்மாவட்டத்துக்கு ரூ.69 லட்சத்து 32 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ரூ.1¼ கோடி இலக்கு

மேலும் சிறு, குறு விவசாயிகள், பெண் விவசாயிகள் கூடுதலாக மானியம் பெறும் வகையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வெவ்வேறு வேளாண் கருவி இனங்களுக்கு தக்கவாறு மானியம் வழங்கப்பட உள்ளது. பொது பிரிவினருக்கு மனித சக்தியால் இயங்கும் கருவிகள் முதல் நெல் நடவு இயந்திரம் வரை முறையே குறைந்த பட்ச மானியம் ரூ.8 ஆயிரம் முதல் அதிகபட்ச மானியம் ரூ.2 லட்சம் வரை வெவ்வேறு வேளாண் கருவி இனங்களுக்கு தக்கவாறு மானியம் வழங்கப்படஉள்ளது. 2014–15–ம் நிதி ஆண்டில் மேற்கண்ட பிரிவினருக்கு இம்மாவட்டத்துக்கு ரூ.1 கோடியே 35 லட்சத்து 10 ஆயிரம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறவுள்ள கடலூர் மாவட்ட விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வட்டத்துக்குட்பட்ட செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை அலுவலகங்களில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயன்அடையுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**குளிர் காலங்களில் கோழிகளை தாக்கும் வெள்ளைக்கழிச்சல் நோய் தடுப்பூசி போட அதிகாரி அறிவுறுத்தல்**

திண்டுக்கல் குளிர் காலங்களில் வெள்ளைக்கழிச்சல் நோய் கோழிகளை தாக்கும் அபாயம் இருப்பதால், அவற்றுக்கு தடுப்பூசி போட கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரி அறிவுறுத்தி உள்ளார்.

வெள்ளைக்கழிச்சல் நோய்

குளிர் காலங்களில் கோழிகளை தாக்கும் வெள்ளைக்கழிச்சல் நோய்க்கு, சனிக்கிழமைதோறும் தடுப்பூசி போடப்படுகிறது. கேரளாவில் பறவை காய்ச்சல் நோய் தாக்கி ஏராளமான வாத்துகள் செத்தன. இதைத்

தொடர்ந்து, அந்த நோய் தமிழகத்துக்குள் பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் கால்நடை பராமரிப்புத்துறையினர் தீவிரமாக செயல்பட்டு வருகிறார்கள். கோழி பண்ணைகளின் உரிமை யாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதே போல், பண்ணைகள் அனைத்தும் கால்நடை பராமரிப்புத்துறையினரின் கண்காணிப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது, குளிர்காலம் என்பதால் வெள்ளைக்கழிச்சல் நோயும் கோழிகளை தாக்கும் அபாயம் உள்ளது. வைரஸ் கிருமி மூலம் இந்த நோய் கோழிகளுக்கு ஏற்படுகிறது. இது வேகமாக பரவும் தன்மை கொண்டதாகும். இந்நோய் தாக்கிய கோழி, ஒன்று அல்லது இரண்டு நாட்களில் இறந்துவிடும். இது குறித்து கால்நடை பராமரிப்புத்துறை துணை இயக்குனர் ரவிச்சந்திரனிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது:–

சனிக்கிழமைகளில் தடுப்பூசி

திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் சுமார் 8 லட்சம் முதல் 10 லட்சம் வரை நாட்டுக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன. தற்போது கடுமையான குளிர் நிலவி வருகிறது. இந்த சூழலில் வெள்ளைக்கழிச்சல் நோய் எளிதில் கோழிகளை தாக்கும். இந்நோய் தாக்கிய பின்னர், கோழிகளை காப்பாற்றுவது என்பது மிகவும் கடினம். அதே போல், இது வேகமாக பரவும் நோய் என்பதால், கோழி வளர்ப்பவர்களுக்கு பெரும் இழப்பு ஏற்படும். இந்த நோய் தாக்காமல் இருக்க முன்கூட்டியே கோழிகளுக்கு தடுப்பு ஊசிபோட வேண்டும். இந்த தடுப்பூசி போடுவதன் மூலம் மற்ற நோய்களும் கோழிகளை எளிதில் தாக்காது. தற்போது, சனிக்கிழமை தோறும் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் வெள்ளைக்கழிச்சல் நோய்க்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. எனவே, கோழி வளர்ப்பவர்கள் சனிக்கிழமைகளில் கால்நடை மருத்துவமனைகளுக்கு சென்று தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம். 6 மாதங்களுக்கு ஒரு முறை இந்த தடுப்பூசியை போடுவது நல்லது. இவ்வாறு அவர் கூறினார்.

## அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை கலெக்டர் தொடங்கி வைத்தார்



அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நடப்பு ஆண்டிற்கான கரும்பு அரவையை மாவட்ட கலெக்டர் தொடங்கி வைத்தார்.

கரும்புஅரவை

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2014-2015-ம் ஆண்டிற்கான கரும்பு அரவை தொடக்க விழா நடந்தது. மாவட்ட கலெக்டர் சுப்பிரமணியன் தலைமை தாங்கி அரவையை தொடங்கி வைத்தார். ஆலையின் தலைவர் ராம்குமார், எம்.எல்.ஏக்கள் முத்துராமலிங்கம், சுந்தரராஜன், மேலாண்மை இயக்குநர் செம்புகுட்டி, கரும்பு விவசாய பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதையடுத்து ஆலையில் கரும்பு அரவை நேற்று காலை 11.45 மணிக்கு தொடங்கியது. இதுகுறித்து ஆலையின் நிர்வாகம் தரப்பில் கூறப்பட்டதாவது:- கடந்த ஆண்டு 1 லட்சத்து 28 ஆயிரம் டன் கரும்பு அரைக்கப்பட்டது. இதன் சர்க்கரை கட்டுமானம் 9.9 இருந்தது. கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட கரும்புகளை தவிர பதியாத கரும்புகளையும் அரவைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நடப்பு பருவ அரவைக்காக 4 ஆயிரத்து 400 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பற்றாக்குறை

இந்த ஆண்டு துவக்கத்தில் போதிய அளவு பருவ மழை பெய்யாத காரணத்தினால் கரும்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆலையின் அரவைக்கு தேவையான கரும்புகள் பற்றாக்குறையாக உள்ளது. இந்தநிலையில் தஞ்சாவூர், பெரம்பலூர் உள்ளிட்ட தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் ஆலைகளில் தற்போது சம்பள உயர்வு

கோரி ஊழியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். எனவே அந்த ஆலைகளில் பதிவு செய்யப்பட்ட கரும்புகளையும் தற்போது அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை அரவைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. கரும்பு அறுவடைக்கு கூலியாட்களையும் ஆலை நிர்வாகம் ஏற்பாடு செய்து தருகிறது. மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் மாவட்ட விவசாயிகள் அந்தந்த கோட்ட அலுவலகங்களை அணுகி நடவு செய்த கரும்புகளை ஆலையின் அரவைக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் கரும்பு ஏற்றி வரும் வாகனங்களின் வாடகை முழுவதையும் ஆலையின் நிர்வாகம் ஏற்றுக்கொள்கிறது. மேலும் தனியார் ஆலைகளுக்கோ அல்லது சொந்தமாகவோ இந்த ஆலைக்கு பதிவு செய்த கரும்புகளை அரவை செய்ய கூடாது என்பதையும் ஆலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. முன்னதாக இந்த விழாவில் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஐக்கையன், மதுரை கோட்டாட்சியர் செந்தில்குமாரி, அ.தி.மு.க ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், அலுவலக மேலாளர் சாமுவேல் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வருவாய்துறை அலுவலர்கள், கரும்பு விவசாய சங்க நிர்வாக குழு உறுப்பினர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## <u>தேனி நகரில் விற்பனைக்கு குவிந்த தர்பூசணி பழங்கள் முன்கூட்டியே சீசன் தொடக்கம்</u>



தேனி தேனியில் தர்ப்பூசணி பழம் சீசன் முன்கூட்டியே தொடங்கி உள்ளது. விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டு உள்ளது.

<u>தர்பூசணி பழங்கள்</u>

கோடை காலத்தில் குளிர்பானம், குளிர்ச்சி தரும் பழங்கள், உணவுப் பொருட்கள் விற்பனை களை கட்டும். கோடைக்கால வெப்பத்தை தணிப்பதில் முக்கிய பங்கு வகிப்பது தர்ப்பூசணி பழங்கள். வழக்கமாக

மார்ச், ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் வெயிலின் தாக்குதல் கடுமையாக இருக்கும் என்பதால் அந்த கால கட்டத்தில் தர்ப்பூசணி பழங்கள் விற்பனை களை கட்டும். இதனால் கோடை காலத்தில் அறுவடை செய்யும் வகையில் காலத்தை கணக்கிட்டு, தர்ப்பூசணி பழங்கள் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபடுவார்கள். ஆனால் இந்த ஆண்டு தற்போதே தர்ப்பூசணி பழங்கள் விற்பனைக்கு குவிக்கப்பட்டு உள்ளது. தேனி நகரில் சாலையோரங்களில் தர்ப்பூசணி பழங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பழக்கடைகளிலும் தர்ப்பூசணி பழங்களை விற்பனைக்காக வைத்துள்ளனர்.

<u>முன்கூட்டியே சீசன்</u>

நகர் பகுதியில் இரவில் கடும் பனி அடித்த போதிலும், பகலில் வெயில் அடிக்கிறது. இதனால் தர்ப்பூசணி பழங்கள் விற்பனையும் மும்முரமாக நடந்து வருகிறது. 1 கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், ‘கடந்த 2 ஆண்டுகளாக கடும் வறட்சி ஏற்பட்டது. பருவமழை பொய்த்து போனதால் பருவமழைக்காலம் கூட கோடை காலம் போன்று இருந்தது. இதனால் இந்த ஆண்டு முன்கூட்டியே தர்ப்பூசணி சாகுபடி தொடங்கப் பட்டது. இதன் காரணமாக சீசனும் முன்கூட்டியே தொடங்கி உள்ளது. விளைச்சல் அடைந்த பழங்கள் பறித்து வரப்பட்டு, விற்பனை செய்யப் படுகிறது. மக்களும் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்’ என்றார்.

## <u>வருசநாட்டில் விடிய, விடிய கனமழை: வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பு</u>



கடமலைக்குண்டு, வருசநாடு பகுதியில் விடிய, விடிய பெய்த கன மழையால் வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

<u>கனமழை</u>

தேனி மாவட்டம் கடமலை –மயிலை ஒன்றியத்தில் பெய்த தொடர் மழையால் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு வைகை ஆற்றில் நீர்வரத்து ஏற்பட்டது. அதனை தொடர்ந்து கடமலை–மயிலை ஒன்றியத்தில் மழை அளவு குறைந்தது. எனவே வைகை ஆற்றில் நீர்வரத்தும் தொடர்ந்து குறைந்து கொண்டே வந்தது. கடந்த சில தினங்களுக்கு முன்பு கடமலைக்குண்டு பகுதி வைகை ஆற்றில் நீர்வரத்து மிகவும் குறைந்து காணப் பட்டது. எனவே ஒரு சில நாட்களில் வைகை ஆற்றில் நீர் முற்றிலும் வற்றி விடும் நிலை இருந்தது. கடந்த புதன்கிழமை கடமலை –மயிலை ஒன்றியத்தில் பெரும்பாலான கிராமங்களில் கனமழை பெய்தது. குறிப்பாக வைகை ஆறு உற்பத்தி ஆகும் வெள்ளிமலை வனப்பகுதியில் கனமழை பெய்தது. அதன் விளைவாக வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்தது.

## ஆற்றில் நீர்வரத்து

நேற்று முன்தினம் இரவு வருசநாடு பகுதியில் கனமழை பெய்தது. மேலும் கனமழை விடிய, விடிய பெய்ததால் வருசநாடு பகுதியில் உள்ள ஓடைகளில் நீர்வரத்து ஏற் பட்டது. இதன் விளைவாக இரவு வைகை ஆற்றில் லேசான அளவு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. தற் போது கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவு அதிக நீர்வரத்து காணப்படு கிறது. இதனால் சில கிராமங்களில் பொதுமக்கள் ஆற்றை கடக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. திடீர் கனமழையால் வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித் துள்ள தால் கடமலை–மயிலை ஒன்றிய பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர். மேலும் சில நாட்கள் கனமழை நீடித்தால் வைகை ஆற்றில் பெரிய அளவில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் வாய்ப்பு உள்ளதாக பொதுமக்கள் கூறினர்.

## பொங்கல் பண்டிகையை முன்னிட்டு செங்கரும்பு விளைச்சல் அமோகம் சின்னமனூர் விவசாயிகள் மகிழ்ச்சி



சின்னமனூர், சின்னமனூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு செங்கரும்பு அமோக விளைச்சல் அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

<u>பொங்கல் கரும்பு</u>

தமிழர் திருநாளான பொங் கல் பண்டிகையில் செங்கரும்பு முக்கிய பங்கு வகிக்கும். தேனி மாவட்டத்தில் செங்கரும்பு சாகுபடியில் சின்னமனூர் சிறந்து விளங்குகிறது. இந்த பகுதியில் உள்ள மண்ணின் தன்மைக்கு செங்கரும்பு அதிக தித்திப்புடன் விளைச்சல் அடையும். பொங்கல் பண்டி கையை கணக்கிட்டு சுமார் 10 மாதங்களுக்கு முன்பே கரும்பு சாகுபடியை தொடங்கி விடுவார்கள். அதன்படி இந்த ஆண்டு சின்னமனூர் பகுதியில் சுமார் 100 ஏக்கருக்கு மேலாக செங் கரும்பு சாகுபடி செய்யப் பட்டது 10 மாத பயிரான செங்கரும்பு பங்குனி மாதம் பயிர் செய்யப்பட்டது. பொங்கல் பண்டிகைக்கு சில நாட்களுக்கு முன்பு இந்த கரும்புகள் வெட்டப்பட்டு, வெளியூர்களுக்கு லாரிகளில் அனுப்பி வைக்கப்படும்.

<u>நல்ல விளைச்சல்</u>

பொங்கல் பண்டிகைக்கு இன்னும் ஒரு மாத காலமே உள்ள நிலையில், தற்போதே கரும்புகள் அமோக விளைச் சல் அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். இன்னும் சில நாட்களில் கரும்பு அறுவடை பணிகள் தொடங்கும் நிலை உள்ளது. இருப்பினும் சில விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் விளைந்த கரும்பை குறிப்பட்ட அளவில் அறுவடை செய்துள் ளனர். அவ்வாறு அறுவடை செய்த கரும்பை தோட்டங் களுக்கு அருகில் சாலையோரம் வைத்து விற்பனை செய்யத் தொடங்கி உள்ளனர். கடந்த ஆண்டு 10 கரும்பு கொண்ட ஒரு கட்டு ரூ.120 முதல் ரூ.140 வரை விற்பனை செய்யப்பட்டது. தோட்டத் தில் இருந்து கரும்பை வெட்டி வாகனத்தில் ஏற்றுவதற்கு ஒரு கட்டுக்கு ரூ.20 கூலியாக கொடுக்கப்படுகிறது. அறு வடைக்கு தயார் நிலையில்

கரும்பு உள்ள நிலையில், நல்ல விலை கிடைக்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர் பார்த்துள்ளனர்.

## உடன்குடி பகுதியில் 15 ஆண்டுகளுக்கு பிறகு அனைத்து குளங்களும் நிரம்பின விவசாயிகள் மகிழ்ச்சி



உடன்குடி பகுதியில் 15 ஆண்டுகளுக்கு பிறகு அனைத்து குளங்களும் நிரம்பின. இதனால் விவசாயிகளும், வியாபாரிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

குளங்கள்நிரம்பின

உடன்குடி வட்டார பகுதியில் சடையநேரிகுளம், தாங்கைகுளம், தருவைகுளம் மற்றும் ஏராளமான சிறிய குளங்கள், குட்டைகள் உள்ளன. அண்மையில் பெய்த மழையில் இந்த குளங்கள், குட்டைகள் அனைத்தும் வேகமாக நிரம்பி வந்தன. கடந்த 2 நாட்களுக்கு முன் பெய்த தொடர் மழையினால் இந்த குளங்கள் முழுமையாக நிரம்பி, உபரி நீர் மறுகால் வழியாக வெளியேறி கருமேனியாற்றில் கலந்து மணப்பாடு கடலில் கலக்கிறது. இதில் சடையநேரி, தாங்கைகுளங்கள் தூர்வாரப்படாமல் இருந்தன. காட்டு செடிகளுடன் இந்த இரு குளங்களும் நிரம்பி மறுகால் பாய்கிறது.தருவைகுளம்

மேலும் குலசேகரன்பட்டினம் தசரா திருவிழாவிற்கு வரும் வாகனங்களை நிறுத்துவதற்கு வசதியாக கோவில் நிர்வாகம் சார்பில் தருவைகுளம் முழுமையாக தூர்வாரப்பட்டு அங்கிருந்த உடைமரங்கள் அகற்றப்பட்டு முழுமையாக சுத்தம் செய்யப்பட்டு இருந்தது. தற்போது தருவைகுளம் முழுமையான அளவில் நிரம்பி கடல் போல் காட்சி அளிக்கிறது. இந்த குளத்தில் மறுகால் வழியாக நீர் வெளியேறி வருவதால் குலசேகரன் பட்டினம் புறவழிச்சாலை தீத்தாபுரம் செல்லும் சாலை வெள்ளநீரில் மூழ்கியது. இதனால் அங்கு போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள்மகிழ்ச்சி

சுமார் 15 ஆண்டுகளுக்கு பிறகு உடன்குடி வட்டார பகுதியில் உள்ள அனைத்து குளங்களும், குட்டைகளும் முழுமையாக நிரம்பி உள்ளன. மேலும் தாழ்வான பகுதிகளில் பல நாட்களாக தண்ணீர் தேங்கி கிடக்கிறது. திரும்பிய திசைகளிலெல்லாம் தண்ணீராக காட்சி அளிப்பதால் விவசாயிகள், வியாபாரிகள், பொதுமக்கள் ஆகியோர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**நீடாமங்கலம் அருகே நவீன தொழில்நுட்பத்தில் வெள்ளரி சாகுபடி கலெக்டர் மதிவாணன் தொடங்கி வைத்தார்**



நீடாமங்கலம் அருகே நவீன தொழில்நுட்பத்தில் வெள்ளரி சாகுபடி செய் யும் பணியை கலெக்டர் மதிவாணன் தொடங்கி வைத்தார்.

வெள்ளரி சாகுபடி

திருவாரூர் மாவட்டம் நீடா மங்கலம் அருகே ராஜப்பையன் சாவடி கிராமத்தில் விவசாயி ஜீத்தமன்கிருஷ்ணா என்பவர் தனது வயலில் ஆயிரம் சதுர மீட்டர் அளவிற்கு நவீன வேளாண்மை தொழிற் நுட் பங்களை கையாண்டு நெல் லுக்கு மாற்றுப்பயிராக வெள் ளரி சாகுபடி செய்ய உள்ளார். இதற்கான பணியை திருவாரூர் மாவட்ட கலெக்டர் மதிவா ணன் தொடங்கி வைத்தார். அப்போது கலெக்டர், வெள் ளரி விதைகளை நட்டு வைத்து சாகுபடி பணிகளை தொடங்கி வைத்தார். பின்னர் விவசாயிகள் மத்தியில் பேசிய கலெக்டர் மதிவாணன் கூறியதாவது:–

இளைஞர்கள் வேளாண்மை யில் தங்களை தீவிரமாக ஈடு படுத்தி கொள்ள வேண்டும். விவசாயம் என்பது 'புலிவாலை பிடித்தது போல்' என்ற நிலை யில் உள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் இளைஞர்களை கொண்ட குழுக்களை அமைத்து, நவீன தொழில் நுட் பங்களை கையாண்டு வேளாண்மை புரட்சியை ஏற் படுத்துவது அவசியமான

தாகும். குறிப்பாக படித்த இளைஞர்கள் அதிக அளவில் தங்களை வேளாண்துறையில் ஈடுபடுத்தி கொள்ள வேண்டும். வேளாண்மை துறையில் தங் களை ஈடுபடுத்தி கொள்ளும் இளைஞர்களுக்கு மாவட்ட நிர்வாகம் முழு ஒத்துழைப்பு அளிக்கும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

நவீன தொழில்நுட்பம்

ஜீத்தமன்கிருஷ்ணா தனது வயலில் ரூ.14 லட்சம் மதிப்பில் மண் இல்லாமல் கயறு நாரை கொண்டு தளம் அமைத்து, அதில் நவீன தொழில் நுட்பங் களை கையாண்டு நெல்லுக்கு மாற்று பயிராக வெள்ளரியை சாகுபடி செய்துள்ளார். இதே போல் பண்ணையில் நெல், வாழை சாகுபடிகளும் செய் யப்பட்டு இருந்தன. இவற்றை யும், வயல் அருகே இருந்த பண்ணைக்குட்டைகளையும் கலெக்டர் மதிவாணன் பார்வையிட்டார். நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குனர் மயில் வாகணன், துணை இயக்குனர் நடேசன், நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சோழன், தாசில்தார்கள் பழனிவேல், ரெங்கசாமி, ஒன்றிய ஆணை யர் ஜீவானந்தம் மற்றும் பல் வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்ட னர்.

**ராணிப்பேட்டையை அடுத்த அம்மூரில் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க விழாவில் 20 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் கோ.அரி எம்.பி. வழங்கினார்**



ராணிப்பேட்டையை அடுத்த அம்மூரில் நடந்த தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க விழாவில் 20 பயனாளிகளுக்கு கறவை மாடுகளை கோ.அரிஎம்.பி.வழங்கினார்.

கூட்டுறவுசங்கவிழா

ராணிப்பேட்டையை அடுத்த அம்மூரில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கிடங்குடன் கூடிய அலுவலக கட்டிடம்

திறப்பு விழா மற்றும் அம்மூர், வேலம், கல்மேல்குப்பம் கிராமங்களை சேர்ந்த 20 பயனாளிகளுக்கு கறவை மாட்டிற்கான கடன் திட்டத்தின்கீழ் கறவை மாடுகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு அம்மூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க தலைவர் ஏ.எம்.சண்முகம் தலைமை தாங்கினார். துணை பதிவாளர் ஜெயவேல் முன்னிலை வகித்தார். துணைத்தலைவர் மோகன் வரவேற்று பேசினார்.

20பேருக்குமாடுகள்

விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக அரக்கோணம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கோ.அரி, வேலூர் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் என்.ஜி.பார்த்திபன், முன்னாள் அமைச்சர் முகம்மதுஜான் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு, தலா ரூ.30 ஆயிரம் மதிப்பில் 20 பயனாளிகளுக்கு கறவை மாடுகளை வழங்கி பேசினர். மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் சுமைதாங்கி சி.ஏழுமலை, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் விஜயன், மாவட்ட கூட்டுறவு பண்டகசாலை தலைவர் ராஜா, கூட்டுறவு அச்சக தலைவர் மோகன், வாலாஜா ஒன்றியக்குழு தலைவர் நிர்மலா, வாலாஜா நகரசபை தலைவர் வேதகிரி, வாலாஜா ஒன்றிய செயலாளர் பூங்காவனம் உள்பட பலர் வாழ்த்தி பேசினர். விழாவில் ஒன்றியக்குழு துணைத்தலைவர் மூர்த்தி, அம்மூர் பேரூராட்சி துணைத்தலைவர் ஏழுமலை, ஒன்றிய முன்னாள் செயலாளர் ராதாகிருஷ்ணன், தொகுதி செயலாளர் முனிசாமி, அம்மூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க நிர்வாக குழு உறுப்பினர்கள் முத்து, மரகதம், மனோகரன், சிப்பாய், ஜெய்பிரகாஷ், தாவுத்பாஷா, விஜயலட்சுமி, மீனாட்சி, சங்கர் உள்பட அம்மூர் பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள், கூட்டுறவு கடன் சங்க பணியாளர்கள், விற்பனை யாளர்கள், அ.தி.மு.க. நிர்வாகிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் அம்மூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கசெயலாளர்ரவிநன்றிகூறினார்.

## கல்வராயன்மலையில் தொடர்மழை கோமுகி அணைக்கு வினாடிக்கு 200 கனஅடி நீர்வரத்து



கச்சிராயப்பாளையம், கல்வராயன்மலை நீர்ப் பிடிப்பு பகுதிகளில் கடந்த 3 நாட்களாக பரவலாக தொடர்மழை பெய்து வருவதால் கோமுகி அணைக்கு வினாடிக்கு 200 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

கோமுகி அணை

கள்ளக்குறிச்சி அருகே கல்வராயன்மலை அடிவாரத் தில் 46 அடி உயரம் கொண்ட கோமுகி அணை உள்ளது. இந்த அணைக்கு ஆண்டு தோறும் கல்வராயன்மலை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் பருவமழை காரண மாக பொட்டியம், கல்படை, மாயம்பாடி ஆறுகள் வழியாக தண்ணீர் வருவது வழக்கம். அதன்படி, கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததால் கல்வ ராயன் மலை பகுதியில் தொடர்மழை பெய்தது. இதன் காரணமாக 17 அடியாக இருந்த கோமுகி அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து 44 அடியை எட்டியது. அதைத்தொடர்ந்து கல்படை, பொட்டியம் ஆறுகள் வழியாக வந்த தண்ணீரை பொதுப் பணித்துறையினர் அணையின் பாதுகாப்பு கருதி பிரதான மதகு வழியாக உபரிநீராக வெளியேற்றினர். தொடர்ந்து, தமிழக அரசு கடந்த மாதம் விவசாய பாசனத்திற்காக கோமுகி அணை பழைய மற்றும் புதிய பாசன வாய்க்ககால்களில் தண்ணீர் திறந்து விடப் பட்டுள்ளதால் 44 அடியாக இருந்த அணை யின் நீர்மட்டம் படிப்படியாக 38 அடியாக குறைந்தது.

வினாடிக்கு 200 கனஅடி நீர் வரத்து

இந்நிலையில், கடந்த மாதம் முதல் கல்வராயன்மலை பகுதிகளில் ஓய்ந்திருந்த மழை மீண்டும் தொடங்கி கடந்த 3 நாட்களாக பலத்த மழையாக கொட்டி வருகிறது. இதனால், கல்வராயன்மலை நீர்ப்பிடிப்பு

பகுதிளில் இருந்து பொட்டியம், கல்படை ஆறுகள் வழியாக நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இரு ஆறுகளிலும் வினாடிக்கு சுமார் 200 கனஅடி தண்ணீர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. மேலும், கல்வ ராயன்மலை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்தால் அணையின் நீர்மட்டம் மீண்டும் 44 அடி கொள்ள ளவை எட்டும் என்பதால் கோமுகி அணை பாசன விவசாயிகள் மற்றும் நேரடி நெல்விதைப்பில் ஈடுபடும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.